

# தமிழரசு

1.11.1995 ரூ.3







எட்டாவது உலகத் தமிழ் மாநாடு - தஞ்சாவூர் - 1995

யாதும் ஊரே யாவரும் கேளிர் !



திருமதி கோமள வரதன்
- நாட்டியம்

டாக்டர் ஸ்ரீநிதி ரங்கராஜன்
- நாட்டியம்



## நிகழ்ச்சிகளில் சில...

# இந்த இதழில்...


அரசின் அற்புதத் திட்டங்கள் பற்றி
அறிய ஓர் அறிவுப் பயணம்
- பொது அறிவுப் புதிர் .......................................7

தமிழன் எனும் அடையாளத்தை
இழக்க மாட்டோம்
- தத்தோ எம். குமரன் .......................................18

முன்னாள் அமைச்சர் கக்கனுக்கு
முழு உருவ வெண்கலச் சிலை
- மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு .................21

சர்க்கரை ஆலை, மின்வாரியம்,
வனக்கழக ஊழியர்களுக்கு போனஸ்
- மாண்புமிகு முதல்வர் ஆணை .......................22

படமும் செய்தியும் ..........................................24

முத்துராமலிங்கத் தேவரின்
இலட்சியத்தை நிறைவேற்றும் முதல்வர்
- மாண்புமிகு அமைச்சர்கள் புகழாரம் ..........27

காவல்துறை மேம்பாட்டுக்கு
கவின்மிகு திட்டங்கள்
- மாண்புமிகு முதல்வர் ஆணைகள் ...............31

நீர் ஆதாரங்களை மேம்படுத்த
ரூ. 808 கோடிக்குப் புதிய திட்டம்
- மத்திய திட்டக் குழு ஒப்புதல் .......................37

வீட்டுவசதி மேம்பாடு: தமிழ்நாட்டுக்கு
இரண்டு தேசிய விருதுகள்
- 80 ஆண்டுகளை 4 1/2 ஆண்டு மிஞ்சியது .....38

ஆதிதிராவிட மகளிர் நலன்காக்க
அற்புதத் திட்டங்கள்
- கோடிக்கணக்கில் மானிய உதவி ..................40

ஒரு கோடி ரூபாய் மதிப்புக்கு
ஜெர்சி பசுக்கள் இறக்குமதி
- டென்மார்க்கிலிருந்து தமிழ்நாடு வந்தன ......42

தெய்வத் தமிழ்மகள்
பெருமையைப் போற்றுவோம்
- முனைவர் ஞான குலேந்திரன் .......................44


இதயங்கவரும் சுடரோட்டம்




பக்கம் ... 2


தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2026
ஐப்பசித் திங்கள் : 15
இதழ்: 9
மலர்: 26
1.11.1995
விலை ரூபாய் : 3


அபூர்வ ஐம்பொன் சிலைகள் மீட்பு



பக்கம் ... 29



இதழ்தோறும் ஓர் இனிய குறள்:

**அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான் (30)**

எல்லா உயிர்களிடத்திலும் செம்மையான அருளை மேற்கொண்டு ஒழுகுவதால், அறவோரே அந்தணர் எனப்படுவோர் ஆவர்.





# இந்திய மண்ணெங்கும் இதயங்கவரும் சுடரோட்டம்!

## மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தொடங்கி வைத்தார்.

முதல் அட்டை சொல்லும் கட்டுரை:

**வ**ரலாற்றுப் புகழ்பெற்ற சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் மாண்புமிகு தமிழகமுதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களால் 28.10.95-ஆம் நாள் காலை 11 மணியளவில் இன்னொரு வரலாற்றுச் சிறப்பான ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டியின் சுடரோட்ட நிகழ்ச்சி தொடங்கி வைக்கப்பட்டது.


நிகழ்ச்சி நாளன்று காலை 10 மணி. பளீரென்று வெயில். முதல் நாளிரவு முழுவதும்

SASF
PEACE•PERSEVERANCE•PROGRESS

பன்னீர் தெளித்தது போல் பெய்த மழையின் ஈரம் மெல்ல மெல்ல மறையத் தொடங்கியது.

போர்வீரர் நினைவுச்சின்னத்திலிருந்து கோட்டை வாயில் வரை சாலையின் இருமருங்கிலும் வண்ணவண்ண உடைகளில் ஏறத்தாழ 2500 சின்னஞ்சிறு பள்ளிக் குழந்தைகள். அவர்களின் கையில், ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டியின் இலச்சினையான இளஞ்சிங்க உருவம் பொறித்த கொடிகள். அதுவும் பல நிறங்களில். அவர்களின் பின்னால் அலையலையாகப் பொது மக்கள். கோட்டை வாயிலின் முன்புறம் கூட்டமாக இளம் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் வண்ணச் சீருடைகளில். கோட்டைக் கொடி மரக் கொத்தளத்தின் மேல் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் வாரியத் தலைவர்கள். இவர்களைத் தவிர, மூத்த அரசு அலுவலர்கள் எல்லோரும் அந்த வரலாற்று நிகழ்ச்சிக்காகக் காத்திருந்தனர். மேடையில், சுடரேந்திய இளஞ்சிங்க இலச்சினை அமைக்கப்பட்டு அது பூவேலைப்பாடுகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது, நிகழ்ச்சிகளைப் பொது மக்களுக்கு அவ்வப்போது தக்க விளக்கத்துடன் இனிமையான குரலில் கவியரசர் இளந்தேவன் அவர்களும், டாக்டர் சுதா சேஷய்யன் அவர்களும் நேர்முக வர்ணனை செய்து கொண்டிருந்தார்கள்.

இளஞ்சிங்க இலச்சினை பொறிக்கப்பட்ட காகிதத் தொப்பிகளைப் பார்வையாளர்களுக்கு விளையாட்டுத்துறை உதவி இயக்குநர் திரு மோகன் வழங்கினார்.



### விளையாட்டுச் சுடர்

ஆறாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டி, வங்காள தேசத் தலைநகர் டாக்காவில் 1993-ஆம் ஆண்டு நடந்தது. அங்கிருந்து தெற்காசிய விளையாட்டுப் போட்டிச் சுடரை, மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் ஆணையின் பேரில் பெற்றுவந்தார். தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் தொடங்கும்போது அதை ஏற்றி வைப்பது மரபு. ஆனால் மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஏற்றி வைக்கப்படும் இந்த விளையாட்டுச் சுடர் இந்தியத் துணைக் கண்டத்தின் அனைத்து மாநிலத் தலைநகர்களிலும் வலம் வர வேண்டும், இதன் மூலம் இந்திய ஒருமைப்பாட்டுக்குப் புத்துணர்வு தரப்படவேண்டும் என்று விரும்பி அதனைப் புதுமையாகச் செயல்படுத்துகிறார்.

### குதிரைப்படை அணிவகுப்பு

மாண்புமிகு முதல்வர் அவர்கள் சரியாக 10.45 மணிக்கு, போர் நினைவுச் சின்னத்தருகே வந்தார். அங்கிருந்து குதிரைப் படையைச் சேர்ந்த 18 குதிரைகள் அவரது காரின் முன்னும் பின்னும் கம்பீரமாக அணிவகுத்து வந்தன. காவலர்களின் இசைவாத்தியம் முழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேடைக்கருகே வந்தார்.


மாண்புமிகு முதல்வர் அவர்களை, சுடர்க்குழுவின் தலைவரும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சருமான திரு.எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் முதலாவதாக வர

வேற்றார். தொடர்ந்து, மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்கள், இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் டாக்டர் பா. சிவந்தி ஆதித்தன், தலைமைச் செயலாளர் திரு. என். ஹரிபாஸ்கர், இ.ஆ.ப., கல்வித்துறையின் செயலாளர் திரு. எல்.என். விஜயராகவன், இ.ஆ.ப., செய்தி மற்றும் சுற்றுலாத்துறைச் செயலாளர் திரு. எஸ். இராமகிருஷ்ணன், இ.ஆ.ப., காவல்துறைத் தலைவர் திரு. டபுள்யு.ஐ. தேவாரம், இ.கா.ப., செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத் தலைவர்கள் வணங்கி வரவேற்றார்கள்.

முக்கியப் பிரமுகர்களின் வரவேற்பை முதல்வர் அவர்கள் ஏற்றுக் கொண்டார். சரியாக 11 மணியளவில் டாக்காவிலிருந்து கொண்டு வரப்பட்ட சுடரை இந்திய ஒலிம்பிக் கழகத் தலைவர் டாக்டர் பா. சிவந்தி ஆதித்தன் வழங்க, முதல்வர் அவர்கள் ஏற்றி வைத்து உயரே தூக்கிப் பிடித்தார். அப்போது இன்னிசை முழங்கியது. வண்ண, வண்ண

## ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் சுடர் ஓட்டம் செல்லும் வழிகள்





# சுடரேந்தும் அடலேறுகள்!

**மா**ண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிச் சுடரைப் பெற்ற விளையாட்டு வீரர் திரு. ஞானசேகரன் மற்றும் வீராங்கனை செல்வி ருஷ்மி சக்கரவர்த்தி ஆகியோர் பற்றிய செய்திகள் பின்வருமாறு:

ஓட்டப்பந்தய வீரர்
திரு ஆர். ஞானசேகரன்

- ☐ பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டம் பழையூரைச் சேர்ந்தவர்.
- ☐ 1978-ஆம் ஆண்டு பாங்காக்கில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் 200 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் கலந்துகொண்டு தங்கப் பதக்கம் வென்றார்.
- ☐ இந்திய விளையாட்டு வீரர்களுக்குப் பயிற்சியளித்து சியோல் சென்று பயிற்சி பெறுவதில் பட்டயம் பெற்றுள்ளார்.
- ☐ 1974-ஆம் ஆண்டிலிருந்து 1979-ஆம் ஆண்டு வரை இந்தியாவின் மிக வேகமான ஓட்டப்பந்தய வீரராகத் திகழ்ந்து, தான் பிறந்த இந்தியத் திருநாட்டுக்குப் பல தங்கப்பதக்கங் களைப் பெற்றுத் தந்தவர்

டென்னிஸ் விளையாட்டு வீராங்கனை
செல்வி. ருஷ்மி சக்கரவர்த்தி

- ☐ சென்னை எத்திராஜ் கல்லூரி மாணவி.
- ☐ 1993-ஆம் ஆண்டு வங்காள தேசத்தில் நடைபெற்ற 6-வது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் டென்னிஸ் விளையாட்டுப் போட்டி யில் கலந்து கொண்டு வெள்ளிப் பதக்கம் பெற்றவர்.
- ☐ 1994-ஆம் ஆண்டு தில்லியில் நடை பெற்ற பெடரேசன் கோப்பைப்போட்டியில் இந்தியாவின் சார்பில் கலந்து கொண்டுள்ளார்.
- ☐ டென்னிஸ் விளையாட்டில் அகில இந்திய அளவில் சிறப்புத்தரம் பெற்ற விளையாட்டு வீராங்கனை.

பலூன்கள் ஆகாயத்தை நோக்கி மெல்ல மெல்லப் பறந்தன. குழந்தைகள், பொதுமக்கள் கைகளைத் தட்டி தங்கள் மகிழ்ச் சியைத் தெரிவித்துக் கொண் டார்கள். இது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

நிகழ்ச்சியின் பெருமையைக் கண்ட வெயில்கூட தன் கடுமையைக் குறைத்தது போல் வெப்பத்தைக்குறைத்தது.

**விளையாட்டு வீரர்கள்**

பின்னர், ஏற்றப்பட்ட விளை யாட்டுச் சுடரை தடகள விளை யாட்டு வீரர் திரு. ஞானசேகரன், டென்னிஸ் விளையாட்டு வீராங் கனை செல்வி ருஷ்மி சக்கர வர்த்தி ஆகியோரிடம் மாண்பு மிகு முதல்வர் அவர்கள் வழங்கி பெருமைமிகு வரலாற்றுச் சிறப்புமிக்க சுடரோட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

**சிங்க இலச்சினை உலா**

சுடரை ஏந்தி, விளையாட்டு வீரர்கள் இருவரும் சாலையில்

ஓடத் தொடங்கினார்கள். தொடர்ந்து ஆயிரக்கணக்கான விளையாட்டு வீரர், வீராங் கனைகள் மஞ்சள் நிறப் பனி யனும், பச்சைநிறக் கால்சட்டை யும் அணிந்து கம்பீரமாக ஓடினார்கள். இவர்கள் சென்னை மீனம்பாக்கம் விமானநிலையம் வரை தொடரோட்ட முறையில் சென்றடைந்தார்கள். இவர் களின் முன்னால், அழகாக அலங்கரிக்கப்பட்ட தெற்காசிய விளையாட்டுப் போட்டியின் இலச்சினையான இளஞ்சிங்க உருவப் பொம்மையை ஏற்றிய வாகனம் ஒன்று சென்று கொண் டிருந்தது.

**மாநிலத் தலைநகர்களில் சுடரோட்டம்**

விளையாட்டுச் சுடரை 28.10.95 அன்று மாலை விமானத்தில் விளையாட்டு வீரர் திரு. ஞானசேகரன் பம்பாய்க்கு எடுத்துச் சென்றார் பின்னர் இந்தியத் துணைக் கண்டத்தின் இருபத்தாறு மாநிலத் தலைநகர் களுக்கும் இந்தச் சுடர் கொண்டு செல்லப்பட்டு, மீண்டும் டிசம்பர் மாதம் 17-ஆம் நாள் சென்னைக் குக் கொண்டு வரப்படுகிறது.

**பன்னாட்டுத் தூதர்கள்**

நிகழ்ச்சியில், சென்னையில் உள்ள மலேசிய உதவித் தூதர் திரு ஷபி பின் அபு சமா அவர்கள், சென்னையிலுள்ள ஜப்பான் நாட்டுத் தூதர் திரு. யுசுகி காகு அவர்கள், சென்னை யிலுள்ள சிங்கப்பூர் நாட்டுத் தூதர் திரு. டி. என். முருகன் அவர்கள், இலங்கைத் தூதர் திரு. கௌதமதாசா அவர்கள், மேஜர் ஜெனரல் ரஞ்சித்சிங் நக்ரா ஆகியோர் கலந்து கொண் டார்கள்.

**என்றென்றும் ஒளிவீசட்டும்!**

இந்தச் சுடரோட்டம் இந்தியத் திருநாடெங்கும் வேற்றுமை எனும் இருளையகற்றி, தேசிய ஒருமைப்பாடு எனும் ஒளியைத் தந்து வலம் வருகிறது. இச்சுடர் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் தொலை நோக்குப் பார்வைக்கு ஒரு எடுத்துக்காட்டாக என் றென்றும் நின்று நிமிர்ந்து ஒளிவீசப் போகிறது.

**- நிகழ்ச்சித் தொகுப்பு: மா. அசோகன்**

## சுடர்க்குழு ஆலோசனைக் கூட்டம்

தலைமைச் செயலகத்தில் தெற்காசிய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகள் தொடர்பான சுடர்க்குழுக் கூட்டம் 24.10.95 அன்று, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் செய்தி மற்றும் சுற்றுலாத்துறைச் செயலாளர் திரு எஸ். இராமகிருஷ்ணன், இ.ஆ.ப., கல்வித்துறைச் செயலாளர் திரு எல்.என். விஜயராகவன், இ.ஆ.ப., செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர், திரு தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., விளையாட்டுத்துறைச் சிறப்புச் செயலாளர் திரு டி. ஸ்ரீதரன், இ.ஆ.ப., மற்றும் சென்னை மாநகரக் காவல்துறை ஆணையர், திரு வீரராகவன், இ.கா.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.



## உங்கள் அறிவுக்கூர்மைக்கு ஓர் அறைகூவல்

# அரசின் அற்புதத் திட்டங்கள் பற்றி அறிய ஓர் அறிவுப் பயணம்!

தமிழக அரசின் நலத்திட்டங்களை விளக்கும் பொது அறிவுப் புதிர் இது. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் செயல்படுத்திவரும் புதுமைத் திட்டங்கள் பற்றியும், வழங்கி வரும் நலத்திட்ட உதவிகள் பற்றியும் நீங்கள் எந்த அளவு அறிந்திருக்கின்றீர்கள் என்பதற்கு இது ஓர் அளவு கோல். அன்றாடம் நமது வாழ்வில் பின்னிப் பிணைந்திருக்கும் அரசின் திட்டங்கள் பற்றிய உங்கள் நுண்ணறிவை உரசிப் பார்க்க, வாசகர்களே, உங்களை அன்போடு அழைக்கின்றோம். புதிரை ஒவ்வொரு எண்ணாக விடுவிக்க விடுவிக்க வெற்றி உங்கள் கையில். வாகை சூடும் பயணம் தொடங்கட்டும், இனி!



1. தமிழக மக்களின் பேராதரவைப் பெற்று, பொதுத் தேர்தலில் வெற்றி வாகை சூடி, தங்கத் தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சராக, புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர், முதன் முதலாக பங்கேற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் பொதுக் கூட்ட நிகழ்ச்சி...

அ. நாகப்பட்டினம்

ஆ. பர்கூர்

இ. சென்னை

(உங்கள் விடை நாகப்பட்டினம் எனில் செல்லுங்கள் எண் 5க்கு)

(உங்கள் விடை பர்கூர் எனில் எண் 9க்குச் செல்லுங்கள்)

(உங்கள் விடை சென்னை எனில் செல்லுங்கள் எண் 13க்கு)


2. விளையாட்டுத் துறையில் தனி ஆர்வம் காட்டி அதன் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு வரும் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், ஓட்டப் பந்தயத்தில் சாதனை படைத்த வீராங்கனை ஒருவரின் பெயரில் ரூ.2 இலட்சம் நிரந்தர வைப்புநிதியாகச் செலுத்தி அதிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையை அவரது விளையாட்டுச் செலவுகளுக்குப் பயன் படுத்திக் கொள்ளலாம் என்று அறிவித்தார். அந்த வீராங்கனையின் பெயர்...

அ. செல்வி ரூபா உன்னி கிருஷ்ணன்

ஆ. செல்வி சோலைமதி

இ. செல்வி அமுதா

(உங்கள் விடை செல்வி ரூபா உன்னி கிருஷ்ணன் எனில் செல்க எண் 10க்கு)




(உங்கள் விடை செல்வி சோலைமதி எனில் எண் 15ஐக் காண்க)

(உங்கள் விடை செல்வி அமுதா எனில் எண் 21க்குச் செல்லுங்கள்)

**3.** மெத்த சரி. பல்லாண்டு காலமாக திருப்பணி வேலை எதுவும் நடத்தப்படாமல் சீரழிந்து கிடக்கும் கோயில்களுக்குத் திருப்பணி செய்யவும், வருமானம் இல்லாத கோயில்களைப் பராமரித்து வழிபாடு நடத்தவும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தொடங்கிய திட்டம் "முதலமைச்சரின் கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி" ஆகும். ஆலயத் திருப்பணிக்கென அற்புதத் திட்டமாக இதனை அமைத்து, முதல் நன்கொடையாக ரூ.1 இலட்சத்து 8 ஆயிரம் ரூபாய் வழங்கி திட்டத்தைத் தொடங்கி வைத்தார், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். சிறப்புமிகு இந் நிதியிலிருந்து இதுவரை 57 திருக்கோயில்களுக்கு ரூ.163.48 இலட்சம் திருப்பணிக்கென அளிக்கப்பட்டுள்ளது. வெற்றிக் களிப்போடு அடுத்து நீங்கள் செல்ல வேண்டிய எண் 2.

**4.** இல்லை, "பெண் குழந்தைகளுக்கான புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா திட்டம்" என்பது ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தைகள் இருந்து, ஆண் குழந்தைகள் இல்லாத ஏழைக் குடும்பத்தினர் கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொண்டால், அப்பெண் குழந்தைகளின் பெயரில் ரூ.2000 முதலீடு செய்து அதன்மூலம் அவர்களது தொடர் கல்வி, நடுநிலைக்கல்வி, உயர், மேல் நிலைக் கல்வி முடிப்பதற்கு ஏதுவாக, குறிப்பிட்ட காலங்களில் உதவி வழங்கும் திட்டம் ஆகும். மேலும் அப்பெண் குழந்தை 20 வயது அடைகிற போது தன்னுடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவோ, உயர்கல்வியைத் தொடரவோ ஒட்டு மொத்தத் தொகையாக ரூ.10,000 வழங்கப்படும் என முதலில் கணக்கிட்டு அறிவிக்கப்பட்டது. பின்னர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஒட்டு மொத்தத் தொகையை ரூ.20,000 ஆக அதிகரித்ததோடு, அப்பெண் குழந்தையின் முதல் பிறந்த நாளில் தங்க மோதிரம் ஒன்றும் வழங்கப்படும் என்றும் அறிவித்துள்ளார். எனவே, எண் 25-க்கு திரும்பிச் செல்க.

**5.** தொடக்கம் கொஞ்சம் தடுமாற்றம். மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் நாகப்பட்டினம் சென்றார்கள் என்பது சரி. ஆனால் முதல்வராகப் பதவியேற்று முதன் முதலாகப் பங்கேற்ற நிகழ்ச்சி அதுவன்று. மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் 18.10.91 அன்று நாகப்பட்டினத்தில் நடைபெற்ற மாபெரும் விழாவில், நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம் என்னும் புதிய மாவட்டத்தைத் தொடக்கிவைத்தார். மேலும் இவ்விழாவில் ரூ.88.41 கோடி அளவில் புதிய நலத் திட்டங்களைத் தொடக்கியும் வைத்தார். எண் 1-க்கு சென்று மீண்டும் முயல்க.

உதயமாகிறது நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம்



**6.** மிக மிக மிகச் சரி. சேலம் மதுரை மாவட்டங்களில் சில இடங்களில் பெண் குழந்தைகள் பிறந்தவுடன் கொல்லப்படு கிறார்கள் என்னும் சோகச் செய்தி கேட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தாங் கொணாத் துயர் கொண்டு அக்கொடுமையைத் தடுத்து நிறுத்திட அறிவித்த திட்டம் தான் "புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா பெண் குழந் தைகள் பாதுகாப்புத் திட்டம்". இத்திட்டத்தின்படி இம்மாவட் டங்களில் ஆரம்பச் சுகாதார நிலையம் மற்றும் சத்துணவுக் கூடங்கள் முன்பு தொட்டில்கள் வைக்கப்பட்டன. பெண் குழந் தைகள் வேண்டாம் என்றெண் ணும் வீணர்கள் குழந்தைகளை அந்தத் தொட்டில்களில் போட அரசே அவர்களை வளர்த்து வருகிறது. **4.11.92** அன்று தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் பயனால் உயிர் தப்பிய மழலைச் செல்வங்கள், வடிவோடு வளர்ந்து, புரட்சித்தலைவியின் ஆசியோடு அண்மையில் 'கான்வென்ட்' பள்ளிகளில் சேர்க்கப்பட்டு உள்ளனர் என்பது எவ்வளவு மகிழ்ச்சி தரும் செய்தி. இந்த மகிழ்ச்சி ததும்பும் மனதோடு மறு கேள்விக்குச் செல்லுக எண் **22.**

**7.** சிதைந்த நிலையில் சீரிழந்து நிற்கும் கோயில்களின் பழம் பெருமையை மீட்கவும், வழிபாடு நடத்தக்கூட வழியின்றி வறிய நிலையில் இருக்கும் ஆலயங் களின் நிலைமாற்றி அணி சேர்க்கவும் தமிழக முதல்வர் மாண்புமிகு ஜெ.ஜெயலலிதா அவர்கள் தொடங்கிய அற்புதத் திட்டம்.......

அ. கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி

ஆ. ஒரு கால பூஜை தொடர் திட்டம்

(உங்கள் விடை கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி என்றால் எண் 3க்குச் செல்லுக)

(உங்கள் விடை ஒரு கால பூஜை தொடர் திட்டம் எனில் செல்லுங்கள் எண் 11க்கு)

**8.** இல்லை. வறுமைக் கோட் டுக்குக் கீழே வாழும் மக்களில் பெண்களை மையமாகக் கொண்டு, அவர்களுக்கு சுய வேலைவாய்ப்பு அளித்து அவர் களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றும் வகையில் செயல் படுத்தப்பட்டுவரும் திட்டம்தான் "மகளிர் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டுத் திட்டம்". ஒருங் கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் துணைத் திட்டமான இத்திட்டத்தின் மூலம் கடந்த நான்காண்டுகளில் **37,976** பெண்கள் சுய வேலைவாய்ப்புப் பெற்றுள்ளார்கள். இதற்கென சுழல்நிதி உதவியாக ரூ.403 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. எண் **25**க்கு திரும்பச் சென்று மறு முயற்சி செய்க.

**9.** அருமையான ஆரம்பம். தர்மபுரி மாவட்டம் பர்கூரில் உள்ள மாதேபள்ளி எனும் கிராமத்தில் நடைபெற்ற மாபெ ரும் அரசு நலத்திட்ட விழாவில் தான், மாண்புமிகு புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தமிழ் நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற் றுக் கொண்ட பின்னர் முதன் முதலாகக் கலந்துகொண்டார். இவ்விழா நிகழ்ச்சியின் மூலம் தர்மபுரி மாவட்டமும் பர்கூர் தொகுதியும் பயன்பெறும் வகை யில் ரூ.33 கோடியே **97** இலட்சம் மதிப்பீட்டில் புதிய திட்டங்

'கான்வென்ட்' செல்ல ஆசிபெறும் கவின்மழலைச் செல்வங்கள்



களைத் தொடக்கி வைத்தார், மாண்புமிகு முதல்வர். இப்படியே வெற்றி தொடரட்டும்; இசைவான கேள்வி காத்திருக்கிறது எண் 7-இல். செல்க.

**10.** தவறு. செல்வி ரூபா உன்னிகிருஷ்ணன் பெண்களுக்கான துப்பாக்கி சுடும் போட்டியில், தேசிய அளவில் பங்கேற்றுத் தங்கப்பதக்கம் வென்றவர். இவரது பயிற்சிக்குத் தேவையான உபகரணங்களை வெளிநாட்டிலிருந்து தருவிக்க அரசு ரூ.3.50 இலட்சம் நிதி வழங்கியுள்ளது. இது தவிர, போட்டிகளில் பங்கேற்கச் செல்லும் போது, அதற்காகும் விமானக் கட்டணத்தையும் அரசே ஏற்றுக் கொள்ளும் என்றும் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்துள்ளார். எண் 2-க்கே திரும்பச் சென்று மீண்டும் ஒரு முறை முயற்சிக்கலாம்.

**11.** இல்லை. "ஒரு கால பூஜை தொடர் திட்டம்" என்பது நலிந்த கோயில்களில் ஒரு காலப் பூஜையேனும் தொடர்ந்து நடந்திட மாண்புமிகு முதல்வர் அவர்களால் தொடங்கப்பட்ட தனித் திட்டம் ஆகும். இத் திட்டத்தின் படி நலிவுற்ற திருக்கோயில்கள் ஒவ்வொன்றுக்கும் வைப்புநிதியாக ரூ.25,000 அரசே முதலீடு செய்து, அதிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு ஒருகால பூஜை நடத்தப்பெறும். இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 6,231 திருக்கோயில்கள் பயனடைய வழிவகை செய்யப்பட்டுள்ளது. எண் 7-க்கே திரும்புக.

**12.** தவறு. மதுரையில் திறக்கப்பட்ட அனைத்து மகளிர் காவல்நிலையம் தமிழகத்தின் இரண்டாவது மகளிர் காவல் நிலையம் ஆகும். மதுரை தல்லாகுளம் பகுதியில் புதியதாக அமைக்கப்பட்ட அனைத்து மகளிர் காவல் நிலையத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 14.7.93 அன்று திறந்து வைத்தார். ஆக, மீண்டும் சென்றிடுக, எண் 22-க்கு.


**13.** கிடையாது. சென்னையில் பங்கேற்ற முதல் விழா, ஆசிரியர் தின விழா - திரு.வி.க. விருது வழங்கும் விழா - நல்லாசிரியர் விருது வழங்கும் விழா - சிறந்த மாணவ மாணவியருக்குப் பரிசு வழங்கும் விழா ஆகிய நான்கு விழாக்களும் ஒருங்கிணைக்கப்பட்டு சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் 5.9.91 அன்று நடைபெற்றது. இவ்விழாவில் விருதுகளும் பரிசுகளும் வழங்கப்பட்டன. அன்றி, நலத்திட்ட உதவிகள் ஏதும் வழங்கப்படவில்லை. திரும்ப எண் 1-க்கே செல்க.

**14.** குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி, மது அரக்கனின் ஏவலாளாக, போதையின் கிடுக்கிப் பிடிக்குள் சிக்கித் தவிக்கும் பேதை மக்கள் விழிப்புணர்ச்சி பெற்றிடவும், மனமாற்றம் கொள்ளவும் வேண்டி, சக்தி வாய்ந்த விளம்பர சாதனமான திரைப்படத்துறையைச் சார்ந்து, தமிழக அரசு தயாரித்த மது விலக்குப் பிரச்சாரத் திரைப் படம்...

அ. வெளிச்சம்

ஆ. இலக்கியச் சோலை

இ. நீங்க நல்லா இருக்கணும்



புன்னகை மணக்கும் புகழ் மணக்கும் சோலைமதிக்குப் பரிசு

(உங்களது பதில் வெளிச்சம் எனில் செல்க எண் 17க்கு)

(உங்கள் விடை இலக்கியச் சோலை எனில் செல்க எண் 19க்கு)

(உங்கள் விடை நீங்க நல்லா இருக்கணும் எனில் எண் 23க்குச் செல்லுங்கள்)

**15.** மிகவும் சரி. மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களிடமிருந்து ரூ.2 இலட்சம் நிதியுதவி பெற்ற



எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் "இலக்கியச் சோலை" வெளியீடு

ஒட்டப்பந்தய வீராங்கனை செல்வி சோலைமதி தான். இவர் இந்தியாவின் அதிவேக வீராங்கனை ஆவார். அடுத்த கேள்வி காத்திருக்கிறது எண் 25-இல்.

**16.** மெத்த சரி. "குற்றவாளிகளைத் தாயன்போடு அணுகி கண்டிக்க வேண்டியவற்றைக் கண்டித்து, அன்பு காட்டித் திருத்த வேண்டிய குறைபாடுகளைத் திருத்தும் கைவண்ணம் பொதுவாக மகளிர் காவலர்களிடம் இருக்கிறது. எனவேதான் முற்றிலும் மகளிரையே கொண்ட காவல் நிலையத்தை அமைக்கலாம். அதில் குறிப்பாக இளங் குற்றவாளிகளையும், முதல் குற்றவாளிகளையும் கையாளலாம்" என்று பிரகடனப்படுத்தி மற்ற மாநிலங்களுக்கெல்லாம் முன்னோடியாக, முழுக்க முழுக்க பெண்களே பணியாற்றும் முதல் அனைத்து மகளிர் காவல் நிலையத்தை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் **13.4.92** அன்று சென்னை ஆயிரம் விளக்கில் தொடக்கி வைத்தார். எனவே, அடுத்த கேள்விக்கு எண் *14*-ஐக் காண்க.

**17.** 'குடி' என்பதால் ஏற்பட்ட சிறு மனமயக்கமோ!' "வெளிச்சம்" என்பது மதுவிலக்குப் பிரச்சாரத்திற்காகத் தயாரிக்கப்பட்ட நாடகம் ஆகும். திரைப்படம் அன்று. மதுவின் மயக்கத்தில் மனைவி மக்களை உதறித்தள்ளி இருளிலே மூழ்கிக் கிடக்கும் எண்ணற்ற ஏழை எளியவர்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வரும் வகையில் "வெளிச்சம்" மேடை நாடகத்தை திரு குன்னக்குடி வைத்தியநாதன் இசையில், நாடகக் காவலர் திரு ஆர்.எஸ். மனோகர் தயாரித்து இயக்கினார். ரூ.2 இலட்சம் செலவில் தமிழக அரசே இந்நாடகத்தைத் தயாரித்துத் தந்தது. அது சரி. எண் 14-இன் சரியான பதிலுக்கு திரும்பச் சென்று இன்னொரு முயற்சி செய்திடுக.

**18.** சென்னை மெரினாக் கடற்கரையில் அமைந்த பாரத ரத்னா, புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களது நினைவகம், எழிலுற மாற்றி அமைக்கப்படும் என மாண்பு மிகு முதல்வர் அவர்கள் அறிவித்தபடியே ரூ.*1.965* கோடி செலவில் மாற்றியமைக்கப்பட்டு புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலிதா அவர்களாலேயே திறந்து வைக்கப்பட்டது. புதுப் பொலிவுடன் டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவகம் திறந்து வைக்கப் பட்ட நாள்...

அ. **31.1.92**

ஆ. **31.3.92**

இ. **24.12.92**

(உங்களது பதில் **31.1.92** எனில் எண் 31க்குச் சென்று காண்க)

(உங்கள் விடை **31.3.92** எனில் எண் 34க்குச் செல்க)

(உங்கள் விடை **24.12.92** எனில் செல்லுங்கள் எண் 37க்கு)

**19.** பூவின் மென்மையும், பொன்னின் மேன்மையும் அறிவுச்சுடர் கொளுத்தும் வன்மையும், ஆதி காண இயலாத தொன்மையும் கொண்ட அன்னைத் தமிழின் சிறப்புக்குச் சிறப்பு சேர்க்க, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், கடந்த ஜனவரித் திங்களில் தஞ்சைத் தரணியில் நடத்திய எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில், தமிழரின் பெருமையை உலகுக்கு உணர்த்திட, தமிழ் இலக்கியக் காட்சிகளைத் தொகுத்து கண்ணுக்கு விருந்தாகவும் கருத்துக்கு செறிவாகவும், தமிழ்நாடு அரசு சார்பில் இயக்குநர் ஆர்.வி. உதயகுமார் அளித்த திரைப்படம்தான் இலக்கியச் சோலை. தமிழின் சிறப்பை

எடுத்துக்காட்ட எடுக்கப்பட்ட படமே தவிர, இலக்கியச் சோலை, மதுவிலக்கு பிரச்சாரப் படம் அன்று. எனவே, உரிய விடை காண உடன் மீண்டு செல்க எண் *14*-க்கே.

**20.** மன்னிக்கவும். கோவையில் திறக்கப்பட்ட அனைத்து மகளிர் காவல் நிலையம், தமிழகத்தின் மூன்றாவது நிலையம் ஆகும். கோவை காந்திபுரம் காட்டூர் காவல் நிலைய வளாகத்தில்



அனைத்து மகளிர் காவல் நிலையம்
உலகிற்கே முன்னோடி

அமைக்கப்பட்ட இந்த அனைத்து மகளிர் காவல் நிலையத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார். இதனைத் தொடர்ந்து தமிழகம் முழுவதும் *57* அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் தற்போது இயங்கி வருகின்றன. திரும்புக எண் *22*-க்கே.

**21.** இல்லை. தாய்நாட்டுக்கும் தமிழ்நாட்டுக்கும் பெருமை தேடித்தந்த செல்வி அமுதா, நீச்சல்-ஓட்டம்-மிதிவண்டிப் பந்தயம் என்று முப்போட்டிகள் இணைந்த டிரையத்லான் வெற்றிச் செல்வி ஆவார். செல்வி அமுதாவைத் தமிழக அரசு தத்தெடுத்துக் கொண்டது என அறிவித்து தொடர்ந்த பயிற்சிக்கென, சர்வதேச விளையாட்டுகளில் பயன்படுத்தப்படும் ரூ.*50,000* மதிப்புள்ள மிதிவண்டியைத் தமிழக முதல்வர் பரிசாக வழங்கினார். அதுமட்டுமன்றி அ.இ.அ.தி.மு.க. சார்பில் ரூ.*25,000* நிதி உதவி, தமிழ்நாடு விளையாட்டு வளர்ச்சிக் குழுமத்தின் மூலம் ரூ.*1* இலட்சம் பரிசு, அவரது குடும்பம் குடியிருக்க ஓர் இல்லம், தினக் கூலியாக இருக்கும் அவரது தந்தையின் பணி நிரந்தரம் ஆகிய சலுகைகளையும் செல்வி அமுதாவுக்கு புரட்சித்தலைவி வழங்கியுள்ளார். ஆகவே, எண் *2* நோக்கி மீண்டும் போகலாமே.

**22.** அகில இந்தியாவுக்கே முன்னோடியாக, வேறெந்த மாநிலத்திலும் இல்லாத புதுமைத்திட்டமாக, பெண்கள் அச்சமோ தயக்கமோ இன்றி, தமக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கு எதிராக புகார் கொடுத்திட ஏதுவாக, முழுக்க முழுக்க பெண்களே பணிபுரியும் மகளிர் காவல் நிலையங்கள் தற்போது மாவட்டத் தலை[illegible]களில் இயங்கி வருகின்றன. முதன்முதலாக, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் திறந்து வைத்த மகளிர் காவல் நிலையம் அமைந்த இடம்...

அ. மதுரை

ஆ. சென்னை - ஆயிரம் விளக்கு

இ. கோயம்புத்தூர்

(உங்கள் பதில் மதுரை எனில் எண் 12க்குச் செல்லுங்கள்)

(உங்கள் விடை சென்னை ஆயிரம் விளக்கு என்றால் செல்க எண் 16க்கு)

(உங்கள் விடை கோயம்புத்தூர் எனில் எண் 20க்குச் செல்லுங்கள்)

**23.** சரியான பதில். மதியை மயக்கும் குடியை, சமுதாயத்திலிருந்து முற்றிலுமாக அகற்ற வேண்டுமாயின், மக்கள் தாங்களாகவே அதைத் தவறு என உணர்தல் வேண்டும். அவ்வாறு, அந்தத் தவறைத் தவறென்று அவருக்கு உணர்த்த, தமிழக அரசு தயாரித்த மதுவிலக்குப் பிரச்சாரத் திரைப்படம் தான் "நீங்க நல்லா இருக்கணும்". நிழல்கள் ரவி, பானுப்பிரியா முதலானோர் நடிக்க, விசு இயக்க **26.11.92** அன்று வெளியிடப்பட்ட இப்படத்திற்குத் தமிழக அரசு கேளிக்கை வரி விலக்கு அளித்தது. வெற்றிக்கு வாழ்த்துக்கள். அடுத்த கேள்விக்குச் செல்க எண் *38*

**24.** ஐயா, கேள்வி - உருவான மாவட்டம் பற்றியது. திருவள்ளுவர் மாவட்டமோ உருவாகப் போகும் மாவட்டம். நிர்வாக




"நீங்க நல்லா இருக்கணும்" - குத்துவிளக்கேற்றும் மணிவிளக்கு

நலன் கருதி, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை மூன்று ஆகப் பிரித்து, திருச்சிராப்பள்ளியைத் தலைமையிடமாகக் கொண்டு, 'திருச்சிராப்பள்ளி பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டம்' என்றும், கரூரைத் தலைமையிடமாகக் கொண்டு 'கரூர் தீரன் சின்ன மலைக் கவுண்டர் மாவட்டம்' என்றும், பெரம்பலூரைத் தலைமையிடமாகக் கொண்டு 'பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டம்' என்றும் பெயர் சூட்டி அமைப்பது என **25.7.95** அன்றுதான், தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையில் நடை பெற்ற அமைச்சரவைக் கூட்டத் தில் முடிவெடுக்கப்பட்டது. ஆகவே எண் 38-க்கு மீண்டும் சென்று முயன்றிடுக.

**25.** பொருளாதாரச் சுமை யின் காரணமாகப் பெண் குழந்தைகள் பிறந்தவுடன் கொல் லப்படும் கொடுஞ்செயலினைத் தடுப்பதற்கென, அத்தகைய பெண் குழந்தைகளை அரசே வளர்க்கும் என்று, உலகே வியக்கும் வண்ணம் ஓர் ஒப்பற்ற திட்டத்தை தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். அந்தத் திட்டம்...

அ. பெண் குழந்தைகளுக்கான புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா திட்டம்

ஆ. புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்

இ. மகளிர் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டுத் திட்டம்

(உங்கள் விடை பெண் குழந்தைகளுக்கான புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா திட்டம் எனில் நீங்கள் செல்ல வேண்டிய எண் 4)

(உங்கள் பதில் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் எனில் செல்லுங்கள் எண் 6க்கு)

(உங்கள் விடை மகளிர் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டுத் திட்டமாக இருக்குமானால் நீங்கள் காண வேண்டிய எண் 8.)

**26.** தவறு. ரூ.200 ஆக வழங்கப்பட்டு வந்த தொகை ரூ.300 ஆக உயர்த்தப்பட்டது, கருவுற்ற பெண்களுக்கு வழங்கப் பட்டுவரும் உதவித் தொகை யாகும். கருவுற்ற பெண்களும், பாலூட்டும் தாய்மார்களும் ஊட்டமான உணவை உட் கொள்ள வசதி செய்து தரும் வகையில் அரசு அளித்து வந்த ரூ.200 உதவித்தொகையை, ரூ.300 ஆக உயர்த்திக் கொடுத் துள்ளார் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். திரும்பச் செல்லுக எண் 35.

**27.** மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்று முதலில் தொடங்கிய புதிய மாவட்டம் என்று கேட்டிருந்தால் **18.10.91** அன்று தொடங்கிவைத்த நாகப்பட்டினம் காயிதெமில்லத் மாவட்டம் என்பது சரியான பதிலாக இருந்திருக்கும். 38-க்கு சரியான விடை வேண்டுமாயின் இன்னொரு முறை முயற் சிப்பதே உத்தமம்.

**28.** கேரள மாநில திருவனந்த புரத்தில் உள்ள பொன்னார

ஸ்ரீதர் அறக்கட்டளை நிறுவிய, "ராஷ்டிரிய பீஷ்மாச்சாரிய விருது" நிகரற்ற முற்போக்கு எண்ணங்கள், ஏராளமான தீர்க்கதரிசனம், மகத்தான அர்ப்பணிப்பு, ஏழை எளியோரின் முன்னேற்றத்திற்காக தியாகம் செய்யும் உள்ளம், அதிசயிக்கத்தக்க அளவுள்ள கிரகித்துக் கொள்ளும் தன்மை, ஆகியவற்றால் தமிழக அரசியல், பொருளாதார, சமுதாய மறுமலர்ச்சியை உருவாக்கி சிறந்த சேவை புரிந்தமைக்காக மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு வழங்கப்பட்டது. விருதுடன் வழங்கப்பட்ட ரூ.25,000- த்தை கேரளாவிலுள்ள அநாதைக் குழந்தைகள் இல்லமான 'ஸ்ரீசித்ரா ஏழைக் குழந்தைகள் இல்லத்துக்கு' நன்கொடையாக வழங்கினார் மாண்புமிகு முதல்வர். அப்படியானால், எண் **39**-ன் சரியான பதில்? உரிய விடைக்கு உங்கள் பார்வையை எண் **33**-க்கு செலுத்துங்கள்.

**29.** பெருத்த பொருளும், பெரும்புகழும் அள்ளி வழங்கும் வள்ளல்துறைதான் கலைத்துறை. ஆனால் அந்தச் சிறப்பு எல்லாருக்குமா வாய்க்கிறது? இல்லையே. அப்படி அதிர்ஷ்ட தேவதையின் அருட்பார்வை கிடைக்காமல், அல்லல்பட்டு நலிந்துபோன கலைஞர்களது குடும்பங்களின் நல்வாழ்வுக்கென நிதியுதவியாக ரூ.250 வழங்கி வந்ததை மாற்றி, அவர்தம் உள்ளம் மகிழ ரூ.400 ஆக உயர்த்திக் கொடுத்திருக்கிறார் மாண்புமிகு தமிழக முதல்வர். ஆக ரூ.250-லிருந்து ரூ.400-ஆக




'தொட்டில் மழலை'க்கு அன்பு முத்தம் ஆயிரம்.


உயர்த்தப்பட்டது நலிந்த கலைஞர்களுக்கான நிதி உதவி! பிறகென்ன? இன்னொரு முறை எண் **35**க்குச் சென்று, முயன்று பார்க்க வேண்டியதுதான்.

**30.** மிக அருமை. தென்னார்க்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து புதியதாக அமைக்கப்பட்ட 'விழுப்புரம் இராமசாமிப் படையாட்சியார் மாவட்டம்' தான், தமிழகத்தின் இளைய மாவட்டம் - 23-வது மாவட்டம் ஆகும். சாதி, சமய அரசியல் மாச்சரியங்களைக் கடந்து, நல்லார்களின் பெயரை மாவட்டங்களுக்குச் சூட்டுவதே நனி நாகரிகம் என்று குறிப்பிட்டு, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் **30.9.93** அன்று, தென்னார்க்காடு மாவட்டத்திலிருந்து விழுப்புரம் இராமசாமிப் படையாட்சியார் மாவட்டத்தை உருவாக்கியும், தென்னார்க்காடு மாவட்டத்திற்கு, 'தென் ஆர்க்காடு வள்ளலார் மாவட்டம்" என்று பெயர் சூட்டியும் புதிய மாவட்டத்தைத் தொடக்கி வைத்தார். மகிழ்ச்சியோடு அடுத்த கேள்விக்குச் செல்லுக எண் **35**

**31.** தவறு தவறு. **31.1.1992** அன்று நடைபெற்ற விழா, வள்ளல் பெருமனத்தவன் - வாடா மலர் முகத்தினன் - வரலாற்று நாயகன் புரட்சித் தலைவர் டாக்டர் எம.ஜி.ஆர் அவர்களின் திருவுருவபபடத்தை சட்டப் பேரவையில் திறந்து வைக்கும் கோலாகலமான விழாவாகும். 'வரையாது வழங்குவதே வாழ்வின் குறிக்கோள்' என்னும் புரட்சித்தலைவரின் வாழகையைத தத்துவததைத் தாரக மந்திரமாகத்

பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவகம்





தாங்கி நிற்கும் அவரது திருஉருவப்படத்தை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் திறந்து வைத்தார்கள். மீண்டும் செல்க எண் 18க்கே.

**32.** மிகச் சரி. பத்திரிகைத் துறையிலிருந்து ஓய்வு பெற்ற ஏழ்மை நிலையிலுள்ள பத்திரிகையாளர்களுக்கு ரூ.400 ஆக இருந்த ஓய்வூதியத்தை ரூ.500 ஆக உயர்த்தி வழங்குமாறு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆணையிட்டார்கள். 1.4.92 முதல் பத்திரிகையாளர் ஓய்வூதியமாக ரூ.500 வ்ழங்கப்பட்டு வருகிறது. அடுத்து செல்க எண் 18.

**33.** சரி. மிகமிகச் சரி. டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் ஆற்றல்மிகு சிந்தனைகளை அளப்பரிய செயல்திறன்களை, அரும்பெரும் குணங்களைப் பட்டியலிட்டு அதற்கென சென்னைப் பல்கலைக் கழகம் **19.12.91** அன்று அவருக்கு டாக்டர் பட்டம் வழங்கியது. அன்றைய மேதகு ஆளுநரும் சென்னைப் பல்கலைக்கழக வேந்தருமான திரு பீஷ்ம நாராயண்சிங் இப்பட்டத்தை வழங்கினார். சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில், குழுமியிருந் தோரின் பலத்த கை தட்டலுக்கு இடையே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். இனி கடையைக் கட்டி, கடைசிக் கேள்வி 40ஐ நாடிச் செல்வோமா?

*34.* தவறு. *31.3.92* அன்று புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் போக்குவரத்துக் கழகம் அல்லவா தொடங்கி வைக்கப்பட்டது! பெரியார் மற்றும் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகங்களி லிருந்து **639** பேருந்துகளைப் பிரித்துப் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகம் என்ற புதிய போக்குவ ரத்துக் கழகம் காஞ்சிபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு தொடங்கப்பட்டது. இந்தப் பேருந்துகள் **587** வழித் தடங்களில் இயக்கப்பட்டு வரு கின்றன. சரி, திரும்ப 18க்கே செல்வோமா? வேறெதற்கு! இன்னொரு முறை முயற்சிக்கத் தான்!

**35.** தம்முடைய உழைப்பை யெல்லாம் பத்திரிகைத் துறைக்கே செலுத்தி, உலகுபுகழ் பெருமை கொண்டோர் அண்மையிலே அணைந்து நிற்கும் போதையினால், வாழ்

நாள் முழுமையும் பத்திரிகைகளுக்கே பணி செய்து, வளம் என்னும் சொல்லின் வரலாறு அறியாது ஏழ்மை நிலையில் வாடி வதங்கிக் கொண்டிருக்கும் ஓய்வு பெற்ற பத்திரிகையாளர்கள் பெற்றுக் கொண்டிருக்கும் ஓய்வூதியத்தை, அவர்தம் குடும்பத்தின் நிலையறிந்து உயர்த்தி வழங்கிட டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆணையிட்டார்கள். அப்படி உயர்த்தப்பட்டத் தொகை...

அ. ரூ.200 லிருந்து ரூ.300

ஆ. ரூ.250 லிருந்து ரூ.400

இ. ரூ.400 லிருந்து ரூ.500

(உயர்த்தப்பட்டத் தொகை ரூ.200 லிருந்து ரூ.300 என்று கருதுவீர்களேயானால் நீங்கள் காண வேண்டியது எண் 26.)

ரூ.250 லிருந்து ரூ.400 ஆக அல்லவா உயர்த்தப்பட்டது என்று நினைப்பீர்களேயானால் நீங்கள் செல்ல வேண்டியது எண் 29க்கு)

(உங்கள் விடை ரூ.400 லிருந்து ரூ.500 என்பதாக இருக்குமானால் செல்லுக எண் 32க்கு)

**36.** உலகமே வியக்க, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தஞ்சைத் தரணியில் நடத்திய எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில், தொடக்க நாளான 1.1.95 அன்று திறந்து வைத்த இராஜராஜ சோழன் மணி மண்டபமே, கலையழகு மிளிரும் அக்கட்டடம்.

(நீங்கள் கட்டங்கட்டமாகக் கடந்து வந்த வெற்றிப் பாதையைக் காண வேண்டுமா? பக்கம் எண் 48-ஐ புரட்டிப் பாருங்கள். வெற்றிக் கோப்பையைப் பெற்றுத் தரும் வழியைக் கண்டு மகிழ்ந்திடலாம்.)

**37.** சரியான பதில், 24.12.92 அன்றுதான் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் மீளாத்துயில் கொண்டுள்ள இடத்தை, தாமரை இதழ்கவிந்து தண்மை சேர்க்கும் தன்மையதாய், கட்டடக் கலைச் சிறப்புடன் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் திறந்து வைத்தார். அன்று பாரத ரத்னா எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவு நாளும் கூட. மாண்புமிகு முதல்வர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும், இலட்சக்கணக்கான பொதுமக்களும் அன்று டாக்டர் எம்.ஜி.ஆர் நினைவகம் சென்று அஞ்சலி செலுத்தினர். அடுத்து கீழே ஒரு எண் தள்ளி, 39-க்கு செல்க.

**38.** தன்னிகரற்ற தங்கத் தமிழகத்தின் இளைய மாவட்டம், அதாவது கடைசியாக உருவான

**உணர்ந்து படிக்கும் ஒரு பக்கம், விரைந்து படித்த ஒரு முழு புத்தகத்தைவிட மேலானது.**

**—மெக்காலே**



துயர்துடைக்கும் கரம், துன்பம் தீர்க்கும் கரம், தூக்கிவிடும் கரம்



நலிவடைந்த மக்களுக்கு நலத்திட்ட உதவிகள்

- மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தொடக்கி வைத்த – புதிய மாவட்டம்...

அ. பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டம்

ஆ. நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம்

இ. விழுப்புரம்- இராமசாமிப் படையாட்சியார் மாவட்டம்

(உங்கள் விடை பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டம் என்றால் செல்லுக எண் 24க்கு)

(உங்கள் பதில் நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம் எனில் எண் 27க்குச் செல்லுங்கள்)

(உங்கள் விடை விழுப்புரம் இராமசாமிப் படையாட்சியார் மாவட்டம் எனில் காண்க எண் 30ஐ)

**39.** உறுதியாக விரைந்து முடிவெடுத்தல், ஆக்க சக்தி, புதுமைநடை, சிந்தனைத் தெளிவு, அரசியல் நுட்பம் இவற்றுக்காகவும், பழமை மற்றும் புதுமைக் கலைகளுக் கிடையே பாலம் அமைத்துள்ள விழுமிய ஆற்றொழுக்கான சிந்தனைக்காகவும், அடிமைத் தளையினின்று மனித உணர்வு களை விடுவிக்கும் எண்ணங் களுடன் இடையறாது செயல் படும் பாங்கினுக்காகவும், சமு தாயத்தின் மக்கள் சக்தியினை நெறிப்படுத்தும் உறுதிக்காகவும், நடவடிக்கைகளுக்காகவும், தமிழினத்தின் மொழி மற்றும் கூட்டாட்சிச் சிந்தனைகளை எடுத்துக்கூறும் தெளிவினுக் காகவும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு வழங்கப்பட்ட விருது...

அ. ராஷ்டிரிய பீஷ்மாச்சார்யா விருது


ஆ. சென்னைப் பல்கலைக் கழக டாக்டர் பட்டம்

(உங்கள் விடை ராஷ்டிரிய பீஷ்மாச்சாரீயா விருது என்றால் நீங்கள் செல்ல வேண்டிய எண் 28)

(உங்களது பதில் சென்னைப் பல்கலைக் கழக டாக்டர் பட்டம் எனில் எண் 33க்குச் செல்லுங்கள்)

**40.** நன்று, மிக நன்று. சுற்றிச் சுழன்று, வாகை சூடி விட்டீர்கள். வெற்றிக்கனியைப் பறிக்க விரைந்து செல்லும் வழி 21 படிகள் கொண்டது. அந்த வழி 1-9-7-3-2-15-25-6-22-16-14-23-38 30-35-32-18-37-39-33-40. வெற்றிக் களிப்புடன் செல்கின்ற வேளையில், நிறைவாக ஒரு கேள்வி. கீழே படத்தில் காணப்படுகிறதே, மண்டபம், அண்மையில், மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர் களால் திறந்து வைக்கப்பட்டு உலகப் பெருமை சூடிக் கொண்ட இந்த புகழ் மண்டபம் என்ன மண்டபம்? விடை வேண்டு மென்றால் எண் 36-ஐக் காண்க.

**–சார்வபௌமன்**



# வாழ்கின்ற நாடு எதுவாக இருந்தாலும் தமிழன் என்னும் அடையாளத்தை இழந்திடாது வாழ்வோம்!

## தத்தோ எம். குமரன்

**தத்தோ எம். குமரன் அவர்கள், மலேசியா நாட்டின் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சகத்தில் நாடாளுமன்றச் செயலாளராகச் சிறப்புடன் செயலாற்றி வருபவர். கடந்த ஜனவரித் திங்களில், தஞ்சைத் திருநகரில் நடைபெற்ற எட்டாவது உலகத் தமிழ்நாட்டில் மலேசிய நாட்டின் சார்பாக இவர் பங்கேற்று, "இருபத்தொன்றாம் நூற்றாண்டும் கலைகளும்" என்னும் தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்குக்கு முன்னிலை வகித்து ஆற்றிய உரை:**

தமிழகத்திலே நடைபெறுகின்ற எழிலார்ந்த எட்டாவது தமிழ் மாநாட்டிலும், அதனையொட்டி நடைபெறுகின்ற 'இருபத்தொன்றாம் நூற்றாண்டும் கலைகளும்' என்ற கருத்தரங்கிலும், அயலகத் தமிழன் என்ற முறையில் கலந்து கொண்டு ஓரிரு வார்த்தைகள் முன்னுரையாகக் கூறுவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

தாய்த் தமிழகத்தில் கலையைப் பற்றி, அதனுடைய வளர்ச்சியைப் பற்றி, அதனுடைய நிலைபாட்டிற்குச் செய்யப் படுகின்ற வேலைகளைப் பற்றியெல்லாம் தொடக்க உரை ஆற்றிய அமைச்சர் அவர்களும், தலைமையுரை ஆற்றிய அமைச்சர் அவர்களும் கூறினார்கள். இது தாய்த் தமிழகம். கலைகளின் பிறப்பிடம். ஆனால், வந்திருக்கும் எங்களுக்கோ, அயலகம். ஆகவே, தமிழன் என்ற பெயரால், அந்த மொழியைப் பேசுகின்ற காரணத்தினால், அந்தக் கலையை ஒழுகுகின்ற காரணத்தினால், அந்த உறவோடு இங்கே வந்திருக்கிறோம்.

அரசியலிலே உங்களோடு எங்களுக்கு ஒட்டும் உறவும் இல்லாவிட்டாலும், எங்களுடைய கலை வாழ்விற்கு, எங்களுடைய மொழி வாழ்விற்கு, எங்களுடைய பண்பாட்டு வாழ்விற்கு நாங்கள் உங்களை நம்பியிருக்கிறோம்.

எப்படியோ எங்களுடைய மூதாதையர் இந்த நாட்டிலிருந்து அயல் நாடுகளுக்குச் சென்றார்கள். சென்ற இடங்களில் கிடைத்த வாய்ப்புகளை, கிடைத்த வசதிகளைப் பயன் படுத்திக் கொண்டு, அவர்கள் அவர்களாக, அதாவது தமிழர்கள் தமிழர்களாகவே வாழ்வதற்குப்போராடிக்கொண்டேவருகிறார்கள்.

தமிழர்கள் தமிழர்களாக வாழ வேண்டும் என்ற உந்துதலால், அந்த உணர்வால், தமிழை வாழ வைக்க வேண்டும்; தமிழ்ப் பண்பாட்டைப் பேண வேண்டும்; தமிழ்க் கலையைப் பின்பற்ற வேண்டும், என்ற உந்துதலால்தான், முதலாவது உலகத் தமிழ் மாநாட்டைக் கோலாலம்பூரிலே நாங்கள் நடத்தக் கூடிய வாய்ப்புப் பெற்றோம். காரணம், அதுபோன்ற மாநாடுகளையெல்லாம் நடத்தாவிட்டால், எங்கே எங்களிடையே இருக்கின்ற உணர்வுகள் அற்றுப்போய்விடுமோ என்ற அச்ச உணர்வின் காரணமாக,'பேட்டரியை சார்ஜ்' செய்வதுபோன்று நாங்கள் அதை மேலும் மேலும் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில்தான் இதுபோன்ற முயற்சிகளிலே ஈடுபட்டோம்.

# வீரபாண்டிய கட்டபொம்மனின் உறவினர் முதுபெரும் தமிழறிஞரின் பேத்திக்கு அரசுப் பணி

## -மாண்புமிகு முதல்வர் ஆணை-

**வ**ட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தைச் சேர்ந்த சித்ரா என்ற பெண்மணி, தான் இந்திய விடுதலைக்காகத் தனது இன்னுயிரை ஈந்த மன்னர் வீரபாண்டிய கட்ட பொம்மனின் நெருங்கிய உறவினரான முதுபெரும் தமிழ்ப் பேரறிஞர் கவிராஜ பண்டிதர் ஜெகவீர பாண்டியனார் அவர்களின் சொந்தப் பேத்தி என்றும், தான் கணவனால் கைவிடப்பட்டவர் என்றும், பள்ளியில் பயிலும் சிறிய குழந்தைகளுடன் பொருளாதார ஆதரவின்றி வறுமையில் வாடுவதாகவும், முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர் பணிக்கான தகுதி தனக்கு இருப்பதால், தனது குடும்பச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, தனக்கு அரசுப் பணி அளிக்க வேண்டும் என்றும் கோரி கருணை மனு ஒன்றினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு அனுப்பி வைத்திருந்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் மனுதாரரின் குடும்பச் சூழ்நிலையையும் அவர் தமிழுக்குத் தொண்டாற்றிய முதுபெரும் தமிழ் அறிஞர் ஒருவரின் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதைக் கருத்தில் கொண்டும், திருமதி சித்ராவிற்கு, தமிழ்நாடு கல்வித்துறையில் முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடம் அளிக்க தக்க ஆணை பிறப்பித்துள்ளார்.

---

அடிநாளிலே வந்தவர்கள், இந்நாளிலே இல்லை. ஆனால் தமிழகத்தைவிட்டு அயல் நாடுகளுக்கு, அயலகத்திற்கு, குறிப்பாக மலேயத்துக்கு வந்தவர்கள் எல்லாம் பிழைப்பைத் தேடி வந்த நிலையிலே இருந்தாலும், அங்கே வாழ்கின்ற அந்தச் சமுதாயம், ஒரு நிலைபெற்ற சமுதாயமாக, தன்னுடைய அடையாளத்தை இழந்துவிடாத நிலையிலே இருக்க வேண்டுமென்ற எண்ணத்தில்தான் அவர்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டார்கள்.

பாரதிதாசன் அவர்கள் கூறுவது போன்று - பாரதிதாசன் அவர்கள், ஏறக்குறைய 40, 45 ஆண்டுகளுக்கு முன்னால் உங்களையெல்லாம் பார்த்து ஒரு ஏக்கக் கவிதையைப்பாடினார்; அந்தக் கவிதையைப் பார்க்கின்றபோது, அது உங்களுக்காக பாடிய கவிதை இல்லை, கடல் கடந்து வாழ்கின்ற தமிழர்கள், தமிழர்களாக வாழ வேண்டுமென்ற ஒரு உணர்வால் அவர் பாடியதாகத் தான் அதை நாங்கள் எப்பொழுதுமே எடுத்துக் கொள்வோம், "என்னரும் தமிழ்நாட்டின் கண்" என்று அந்தக் கவிதை வரிகளிலே பாரதிதாசன் குறிப்பிட்டுக் கூறுகின்றார். ஆனால், நாங்கள் அந்தக் கவிஞனுடைய அனுமதியைப் பெறாமல், உங்களுடைய அனுமதியைப் பெறாமல், அந்தத் 'தமிழ்நாடு' என்பதை மாற்றி 'மலைநாடு' என்று வைத்துக்கொண்டு, அந்தக்



கவிதைக்கு இலக்கணமாக எங்களுடைய வாழ்க்கையை அமைத்துக்கொள்வதற்கான முயற்சியிலே நாங்கள் ஈடுபட்டுக்கொண்டு வருகிறோம்.

''என்னரும் மலைநாட்டின் கண், எல்லோரும் கல்வி கற்று''. கல்வியை அடுத்துக் கூறுகின்றார் பாவேந்தர், "பன்னரும் கலை ஞானத்தால்" என்று. கலை என்று கூறவில்லை, அருங் கலை என்று கூறவில்லை, பல அருங்கலை என்று கூறுகின்றார். ஆகவே, "பன்னரும் கலை ஞானத்தால், பராக்கிரமத்தால், அன்பால், உன்னத இமயமலையைப் போல், ஓங்கிடும் கீர்த்தி எய்தி இன்புற்றார்" என்று சொல்லிவிட்டு அடுத்துச் சொல்கிறார்: ''மற்றோர் இயம்பிடக் கேட்டிடல் என்னாளோ?" என்று. யார் அந்த மற்றோர்? தமிழகத்திலே பார்க்கின்ற இடமெல்லாம் தமிழர்கள். ஆகவே, அங்கே மற்றோர் என்று கூறியபோது, நாங்கள் எவ்வாறு எடுத்துக் கொண்டோம் என்றால், நாங்கள் மலாயக் கார மக்கள் மத்தியிலே வாழ்கின்றோம், சீனர் மத்தியிலே வாழ்கின்றோம், பல்வேறு மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் மத்தியிலே வாழ்கின்றோம், பல்வேறு பண்பாட்டு மூலங்களைக் கொண்டவர்கள் மத்தியிலே வாழ்கின்றோம், ஆகவே, அங்கே பாவேந்தன் எங்களுக்காகச் சொன்னான். மற்றோர் என்கிறபோது சீனர்களும், மலாயக்காரர்களும் பார்க்க நீ கல்வியிலே சிறந்து, கலையிலே சிறந்து, அறிவிலே சிறந்து, ஆற்றலிலே சிறந்து, நீ வாழ வேண்டுமென்று அவர் எங்களுக்குக் கூறியதைப் போன்று அந்தக் கருத்தினை ஏற்று எங்களுடைய கலையை, நம்முடைய கலையை, அயல கத்திலே, மலையகத்திலே வளர்ப்பதற்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

தமிழ்ப் பெருமக்களே, ஒன்றை நான் உங்களுக்கு கூறுவேன். *50* ஆண்டுகளுக்கு முன்னால், *12* விழுக்காடு சமுதாயமாகத் தமிழ்ச் சமுதாயம் மலையகத்திலே இருந்தது. அந்தச் சமுதாயம், அந்த பெருமைக்குரிய சமுதாயம், கால ஓட்டத்தில், கால வளர்ச்சி யின் காரணமாக, நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகின்றது. இன்றைய நிலை யிலே எங்களுடைய சமுதாயத்தின் எண்ணிக்கை *9.8* விழுக்காடு. எங்களுடைய நாடு துரித வளர்ச்சி கண்டு, துரித வளர்ச்சியின் காரணமாக *30* ஆண்டுத் திட்டங்களை வைத்து, அந்த இலக்கை அடைவதற்கான முயற்சியிலே ஈடுபட்டு வருகின்றது. அரசாங்கத்தின் புள்ளிவிவரப் படி, அந்த இலக்கை நாங்கள் அடை கின்றபோது, **5.6** விழுக்காடு சமுதாயமாக நாங்கள் இருக்கப் போகிறோம்.

**5.6** விழுக்காடு சமுதாயமாக இருக்கின்ற இந்தத் தமிழ்ச் சமுதாயம் தன்னுடைய பண்பாட்டை இழக்காமல், தொடர்ந்து வாழ வேண்டுமானால், தமிழகம் எங்களுக்கு எல்லா நிலைகளிலும், உதவிகளைச் செய்ய வேண்டுமென்று இந்த வேளையிலே கேட்டுக்கொள்ள விரும்புகிறோம்.

நாங்கள் தமிழராக இருக்கின்ற, காரணத்தினால்தான், இங்கே இந்தத் தமிழ் மாநாட்டுக்கு வந்திருக்கிறோம். இந்த எழிலார்ந்த எட்டாவது மாநாட்டை இவ்வளவு சீரும் சிறப்புமான முறையிலே நடத்துவதற்கு அனைத்தாலும் முயன்று வெற்றியை ஈட்டியுள்ள மாண்புக்கும், மரியாதைக்கும் உரிய புரட்சித் தலைவி டாக்டர் ஜெயலலிதா அவர்களுக்கு எங்களுடைய நாட்டின் தமிழ் மக்களின் சார்பில், எங்களுடைய பணிவன்பான நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, நான் கூறியதுபோன்று, எங்களுடைய கலைத் தேவையை, எங்களுடைய பண்பாட்டுத் தேவையை, மொழித் தேவையை, எங்க ளுடைய சமயத் தேவையை நிறைவு செய்ய நீங்கள் தயாராக இருக்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன். ✷

# முன்னாள் அமைச்சர் கக்கனுக்கு முழு உருவ வெண்கலச் சிலை!

## மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிப்பு

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம் தும்பைப்பட்டி என்ற ஒரு சிறிய கிராமத்தில் தாழ்த்தப்பட்ட ஒரு ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து, சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்று, சிறை சென்று, தன்னலமற்ற பொதுச் சேவையில் ஈடுபட்டு, தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டவரான திரு பி. கக்கன் அவர்களது சீரிய தொண்டினை நினைவுகூரும் வண்ணம், மதுரை மாநகரில் அவருக்குச் சிலை அமைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ளார்.

தமிழக அமைச்சரவையில் பங்கேற்று அமைச்சராகச் சிறப்பாகப் பணியாற்றியவர் திரு பி. கக்கன் அவர்கள். நாடாளுமன்ற உறுப்பினராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றி, தமிழ்நாட்டிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களுடைய ஒட்டுமொத்த வாழ்க்கை முன்னேற்றத்திற்கும், அவர்தம் மேம்பாட்டிற்கும் பாடுபட்டு, பொது வாழ்க்கையில் நற்பண்புகளைக் கடைப்பிடித்த திரு பி. கக்கன் அவர்களின் தொண்டை நினைவுகூர்கின்ற வண்ணம், அவரது முழுவுருவ வெண்கலத் திருவுருவச் சிலை ஒன்றினை தமிழக அரசின் சார்பில் அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதியாகச் செயலாற்றி, அவர்களின் நன்மைக்காகப் பாடுபட்ட திரு பி. கக்கன் அவர்களின் திருவுருவச் சிலை, வெகுவிரைவில் மதுரையில் திறந்து வைக்கப்படும் என்றும் அதற்கு ஒரு விழா நடத்தப்படும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்.

மாண்புமிகு முதல்வர் ஆணை

# நலிந்த ஆலைத் தொழிலாளர்களுக்கு நிவாரண உதவித்தொகை

தமிழகத்தில் நலிவடைந்து மூடப்பட்ட 17 ஆலைகளில் பணிபுரிந்து தற்போது வேலையின்றி அவதியுறுகின்ற 10,484 தொழிலாளர்களின் குடும்பங்கள், தீபாவளியைக் கொண்டாடுவதற்காக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், குடும்பம் ஒன்றுக்கு 400 ரூபாய் வீதம் நிவாரண உதவித் தொகை வழங்கி ஆணையிட்டார். இதன்படி 1.1.1990க்குப் பிறகு நலிவடைந்து மூடப்பட்ட 17 ஆலைகளில் பணிபுரிந்த 10,484 தொழிலாளர்களின் குடும்பங்கள் பயன் அடைந்தன.

கடந்த ஆண்டு வழங்கப்பட்டது போலவே இந்த ஆண்டும் இந்தக் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் 400 ரூபா கருணைத் தொகை வழங்கப்பட்டது. மொத்தத் தொகையான 42 இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார். தொழிலாளர் நல ஆணையர் அவர்கள் மூலமாக, இந்த நிவாரண உதவித்தொகை பாதிக்கப்பட்ட, தொழிலாளர்கள் பயன்பெறும் வண்ணம், தீபாவளிக்கு முன்பாக வழங்கப்பட்டது.

● சர்க்கரை ஆலை ஊழியர்களுக்கு ரூ.10 கோடி
● மின்வாரிய ஊழியர்களுக்கு ரூ.28 கோடி
● வனக்கழக ஊழியர்களுக்கு ரூ.2.3 கோடி



# போனஸ் வழங்க மாண்புமிகு முதல்வர் ஆணை

**தமிழகத்தில் உள்ள கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர் மற்றும் அலுவலர்களுக்கும், மின் வாரியத்தில் பணி செய்யும் தொழிலாளர் மற்றும் அலுவலர்களுக்கும், அரசு ரப்பர் கழகம், தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், மற்றும் தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் ஆகிய வனக் கழக ஊழியர்களுக்கும் போனஸ் வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.**

**சர்க்கரை ஆலை ஊழியர்களுக்கு போனஸ்**

தமிழகத்தில் உள்ள கூட்டுறவு மற்றும் பொதுத்துறைச் சர்க்கரை' ஆலைகளில் பணி புரியும் 15,000 தொழிலாளர் மற்றும் அலுவலர்களுக்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர், ஜெ.ஜெயலலிதா அவர்கள் இந்த ஆண்டிற்கான போனஸ் தொகையை அறிவித்து ஆணையிட்டுள்ளார்.

கடந்த ஆண்டைப் போலவே போனஸ் பெறுவதற்குத் தகுதி பெறாத புதிதாக அமைக்கப் பட்டு செயல்பட்டு வரும் 3 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை தவிர்த்து மற்ற அனைத்து சர்க்கரை ஆலைகளிலும் பணிபுரியும் ஊழியர்களுக்கு 20 சதவிகிதம் போனஸ் வழங்கப் படும். போனஸ் விடுமுறைக் காலத்திற்குள் உள்ள 3 ஆலை களில் பணிபுரியும் ஊழியர் களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் குறைந்தபட்ச போனஸ் தொகை யாக 8.33 சதவிகிதம் வழங்கப் படும் என அறிவித்துள்ளார். புதிய ஆலைகள் உட்பட 15 சர்க்கரை ஆலைகளில் பணி புரியும் நிரந்தரப் பணியாளர் களுக்கு 500 ரூபாய் வீதமும், தினக்கூலியாகப் பணியாற்று பவர்களுக்கு 300 ரூபாய் வீதமும் கருணைத் தொகை வழங்கவும் ஆணையிட்டுள்ளார்.

போனஸ் சட்டத்தின்படி போனஸ் பெற வாய்ப்பு இல்லாத அலுவலர்களுக்கும், ஊழியர்களுக்கும் கருணைத் தொகையாக 2,500 ரூபாய் வழங்கப்படும்.

உயர்த்தப்பட்ட போனஸ் உச்ச வரம்புகளின்படி 1993-94 ஆம் ஆண்டிற்கான போனஸ் தொகை கணக்கிடப்பட்டு நிலுவைத் தொகையும் வழங்கப் படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு மற்றும் பொதுத் துறையில் உள்ள சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் 15,000 ஊழியர்கள் மற்றும் அலுவலர் களுக்குச் சுமார் 10 கோடி ரூபாய் அளவிலான போனஸ் தொகையை வழங்கி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

**மின் வாரிய ஊழியர்களுக்கு போனஸ்**

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் ஒரு இலட்சம் தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு, இந்த ஆண்டிற்கான போனஸ் தொகையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், அறிவித்துள்ளார்.

போனஸ் சட்டத்தின்படி, போனஸ் பெறத் தகுதி உள்ள அனைவருக்கும் 8.33 சதவிகிதம் போனஸ் தொகையும், 8.67 சதவிகிதம் கருணைத் தொகையாகவும் வழங்கப்படும். குறைந்த பட்சம் கருணைத் தொகை 1,050 ரூபாயாக இருக்கும்படி பார்த்துக்கொள்ளப்படும்.

போனஸ் சட்டத்தின்படி, போனஸ் பெறுவதற்கு வாய்ப்பு அற்ற தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஊழியர்கள் மற்றும் அலுவலர்களில் மாதம் 6,000 ரூபாய்க்குள் மாத ஊதியம் பெறும் ஊழியர்களுக்குக் கருணைத் தொகையாக 2,500 ரூபாய் வழங்கப்படும். மாதம் 6,000 ரூபாய்க்கும் மேலாக ஊதியம் பெறும் இதர அலுவலர்களுக்குக் கருணைத் தொகையாக 1,500 ரூபாயாக வழங்கப்படும்.

இவ்வாறு, அனைத்துத் தரப்பினருக்கும் இந்த ஆண்டு போனஸ் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார். இவ்வாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சரால் அறிவிக்கப்பட்ட போனஸ் மற்றும் கருணைத் தொகையான 28 கோடி ரூபாய் தமிழ்நாடு மின்சார வாரிய ஊழியர்களுக்கு விரைவில் பட்டுவாடா செய்யப்படும்.

**பொறுமை என்னும் செடி கசப்பானதுதான். ஆனால் அதன் பழங்களோ இனிப்பானவை!**

**–ஜெர்மானியப் பழமொழி**

**உன்னைத் தாழ்ந்தவனாக எண்ண வைப்பதில், உன்னுடைய ஒப்புதலின்றி யாரும் வெற்றி பெற முடியாது.**

**–எலினார் ரூஸ்வெல்ட்**

**பணிதல் என்னும் பண்பு அறியாதவனுக்கு, அதிகாரத்துடன் ஆணையிட உரிமை கிடையாது.**

**–பிலிப்பைன்ஸ் பழமொழி**

**வனக்கழக ஊழியர்களுக்கு போனஸ்**

தமிழ்நாடு வனத்துறையின் கீழ் நாகர்கோவிலில் அரசு ரப்பர் கழகம், குன்னூரில் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் மற்றும் திருச்சியில் தமிழ்நாடு வனத்தோட்டக் கழகமும் செயல்பட்டு வருகின்றன.

இம்மூன்று அரசுக் கழகங்களின் 16,836 பணியாளர்களும், தொழிலாளர்களும் பணியாற்றி வருகிறார்கள். இவர்களின் செயற்பாடுகளை உன்னிப்பாகக் கவனித்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அரசு, ரப்பர் கழகம் மற்றும் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகங்களின் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு 8.33 சதவிகிதம் போனஸ் மற்றும் தலா ரூ.1,075 கருணைத் தொகையாகவும், தமிழ்நாடு வனத் தோட்டக் கழகப் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு 8.33 சதவிகிதம் போனஸ் மற்றும் 8.67 சதவிகிதம் கருணைத் தொகையும் வழங்க ஆணை பிறப்பித்துள்ளார்.

இதன் மூலம், மேற்சொன்ன மூன்று கழகங்களுக்கும் இரண்டு கோடியே முப்பத்திரண்டு இலட்சத்து எண்பத்தி ஓராயிரம் ரூபாய் போனஸ் மற்றும் கருணைத் தொகையாக வழங்கப்படுகிறது. இது சென்ற ஆண்டை விட ரூபாய் 31.73 இலட்சம் அதிகமாகும்.

இக்கழகங்களுடைய வரலாற்றில் போராட்டமோ, கதவடைப்போ, பேச்சுவார்த்தையோ நடைபெறாமல் தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் மேற்கண்டபடி போனசும், கருணைத்தொகையும் வழங்குவதன் மூலம் பணியாளர்கள் தொழிலாளர்களின் குடும்பங்களின் ஒளிவிளக்கை ஏற்றி வைத்துள்ளார்.



சென்னை ஔவை சண்முகம் சாலை, அனைத்திந்திய அண்ணா தி.மு.கழகத் தலைமையகத்தில் அமைந்துள்ள, பாரத ரத்னா அமரர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவச் சிலைக்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி ஜெ.ஜெயலலிதா அவர்கள், 17.10.95 அன்று, மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் உடன் இருந்தனர்.

---

## படமும் செய்தியும்





1100 ஜோடி திருமண விழாவில், ஆயிரங்காலத்துப் பயிராய் வாழ்க! என்று ஆசி வழங்குகிறார் மாண்புமிகு முதல்வர் அவர்கள் (26.10.95, சிதம்பரம்)



பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் பிறந்த நாளையொட்டி, சென்னை அண்ணாசாலை நந்தனம் சந்திப்பில் அமைந்துள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சிலைக்கு, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். **(30.10.95, சென்னை)**


தமிழ்நாடு அரசின் சார்பில் திருச்சியில் 15.10.95 அன்று நடைபெற்ற காயிதேமில்லத் முகமது இஸ்மாயில் சாகிப் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவில், காயிதேமில்லத் திருவுருவப் படத்தை, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு கு.ப. கிருஷ்ணன் அவர்கள் திறந்து வைத்தார். மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. க. பொன்னுசாமி, மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு. மு. தென்னவன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. எஸ். நாகூர் மீரான், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் அனைத்திந்தியப் பொதுச் செயலாளர் திரு. ஏ.கே.ஏ. அப்துல்சமது, சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி. ஜீனத் சர்புதீன், திரு. டி. ரத்தினவேல், டாக்டர் ச. ஆரோக்கியசாமி, செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப. ஆகியோர் உடன் இருந்தனர்.





மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் உலகச்சிக்கன விழாவில் சிறுசேமிப்புத் திட்ட முதலீட்டாளர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்கள். மாண்புமிகு அரசுத்தலைமைக் கொறடா திரு. எஸ். ஜெயக்குமார் மாநிலத்தேசிய சேமிப்பு ஆலோசனைக் குழு துணைத் தலைவர் டாக்டர் ஜெ. பரந்தாமன் ஆகியோர் உடனுள்ளார்கள். (30.10.95 சென்னை)

தமிழ்நாடு அரசின் சார்பில், மறைந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களை நினைவுகூரும் வகையில் 'தேசிய மறு சமர்ப்பண நாள்' நிகழ்ச்சி இராணி மேரிக் கல்லூரியில், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. மு. தென்னவன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. டி.எம். செல்வகணபதி அவர்கள் பேருரையாற்றினார்கள். மைலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் கராத்தே திரு. வெ. பாலசுப்பிரமணியம், திரு. தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, டாக்டர் திருமதி நிர்மலா தியாகராஜன், முதல்வர், இராணி மேரிக் கல்லூரி ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள். (30.10.95 சென்னை)





# "பசும்பொன் முத்துராமலிங்கத்தேவரின் இலட்சியத்தை நிறைவேற்றி வருபவர் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி"

## -அமைச்சர்கள் புகழாரம்

பசும் பொன் முத்துராம லிங்கத் தேவர் பிறந்தநாள் விழா 30.10.95 அன்று பசும்பொன் கிராமத்தில் கொண்டாடப் பட்டது. இவ்விழாவிற்கு, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சான்வத்ராம், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

**மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது:**

"வெள்ளையர்களை எதிர்த்து, சுதந்திரம் இந்த மண்ணுக்கும், மக்களுக்கும் கிடைக்கவேண்டும் என்பதற்காகத் தன் உயிரை அர்ப்பணித்த மாவீரன் முத்து ராமலிங்கத் தேவர். மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், நாட்டிற் காகப் பாடுபட்டவர்களின் பெருமையை எடுத்துச் சொல் வதற்காக இந்த விழாவை நடத்துகிறார். மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், இந்த நினைவகத்திற்கு வந்து சென்ற பிறகு ரூபாய் பத்து லட்சம் செலவில் புதுப்பிக்கப் பட்டு அழகு படுத்தப் பட்டுள்ளது. காலங்கள், யுகங்கள் மாறினாலும், மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மனிதப் புனிதர் முத்துராமலிங்கத் தேவர் ஆவார்".

**மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு அ.மா. பரமசிவன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது:**

"தேவருடைய புகழ் பரவும் வகையில் மறைந்த முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் அன்னாருக்கு நினைவிடம் கட்டி பெருமைப்படுத்தினார். அவரது வழியில் வந்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், தேவர் பெருமகனுக்குச் சென்னையில் மிகவும் பிரம்மாண்டமான அளவில் சிலை அமைத்துப் பெருமைபடுத்தி உள்ளார். தேவர் பெருமகன் எந்த லட்சியத்திற்காகப் பாடுபட்டு வந்தாரோ, அந்த லட்சியத்தோடு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பணியாற்றி வருகிறார். தேசியத்தையும் தெய்வீகத்தையும் தேவர் பெருமகன் இரு கண்களாகப் போற்றி வந்தார். அவர் தேசியத் தலைவராகவும், சாதி மதப் பேதமின்றி அரிசன மற்றும் முஸ்லீம் மக்களை அரவணைத்து அனைவரின் நலனுக்காகப் பாடுபட்டவர். தொகுதிக்குச் செல்லாமலேயே ஒரே நேரத்தில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே தலைவர் முத்துராமலிங்கத் தேவர்தான். ஆதி திராவிட மக்களுக்காக 33 கிராமங்களை அவர் தானமாக வழங்கினார்".

**மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர்**
**திரு வி. சத்தியமூர்த்தி அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது:**

"கடந்த ஆண்டு மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், தேவருடைய நினைவிடம் வந்து சிறப்புற அழகு படுத்தினார். தேவரை அன்று எதிர்த்தவர்கள் இன்று மாண்புமிகு முதல்வர் அவர்களை எதிர்க்கிறார்கள். தேவருடைய அரசியல் வாழ்க்கை சுயநலம் அற்றது. அதுபோல் எதிர்கால ஆதாயம் தேடாமல், மாண்புமிகு முதல்வர் அவர்கள், தேவருக்குப் புகழாரம் சூட்டி வருகிறார். 'தேவர் இனம்' என அறிவிக்க வேண்டும் என்று முக்குல மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு முதல்வர் அவர்கள் முக்குலத்தைச் சேர்ந்த கள்ளர், மறவர், அகமுடையாரை ஒரே இனமாகத் தேவரினம் என அறிவித்துள்ளார். இதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஜாதி, மத, பேதம் இல்லாமல் மாண்புமிகு முதல்வர் நல்லாட்சி நடத்தி வருகிறார். அவருடைய வழியில் தேவருடைய புகழ் காக்க நாம் அனைவரும் பாடு படுவோம்".

இவ்விழாவில், நாடாளுமன்ற உறுப்பினர் திரு சீனிவாசன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. சுந்தரராஜன், திருமதி பாண்டியம்மாள், திருமதி மணிமேகலை, கோவில் வாரியத் தலைவர் திரு. ராஜேந்திரன், உதவி ஆட்சியர் திரு ராஜ்குமார், வட்டாட்சியர் திரு. லெட்சுமணப் பெருமாள், ஆகியோர் கலந்துகொண்டனர். விழா முடிவில், செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு. நல்லதம்பி அவர்கள் நன்றி கூறினார்.

## வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களுக்கு நிலவரி ரத்து

**வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில், தோல் பதனிடும் தொழிற்சாலைக் கழிவுகளால் பாதிக்கப்பட்டுள்ள விவசாய நிலங்களுக்குரிய நில வரி அனைத்தும் ரத்து செய்யப்படும் என்று கடந்த ஆண்டு 10.9.1994 அன்று வேலூரில் நடைபெற்ற அரசு விழா ஒன்றில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஏற்கனவே அறிவித்திருந்தார்.**

**அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து மாவட்ட நிர்வாகம் தேவையான ஆய்வுகளை மேற்கொண்டு தனது கருத்துருவை அரசுக்கு அனுப்பி வைத்தது. அந்தச் செயற்குறிப்பை ஆய்வு செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் தொழிற்சாலைக் கழிவுகளால் பாதிப்புக்குள்ளாகி, விவசாயம் செய்ய முடியாத நிலைக்குள்ளான விவசாய நிலங்களுக்கு பசலிகள் 1388, 1389, 1391, 1392, 1393, 1396 மற்றும் 1397 ஆகியவற்றுக்கான நில வரியான 1,48,320/- ரூபாயைத் தள்ளுபடி செய்து ஆணை பிறப்பித்துள்ளார். அந்தப் பகுதி வாழ் விவசாயப் பெருங்குடி மக்களின் நீண்ட நாள் கோரிக்கை இதன் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**


● நான்காம் அட்டை சொல்லும் செய்தி:

# அபூர்வப்பஞ்சலோகச் சிலைகள் மீட்பு

## காவல் துறைக்கு முதல்வர் பரிசு, பாராட்டு

**விலைமதிக்கவொண்ணா அபூர்வமான ஐந்து பஞ்சலோகச்சிலைகளைக் களவாடப்பட்ட சில மாதங்களிலேயே கண்டுபிடித்துத் தமிழக காவல்துறை சாதனை படைத்துள்ளது. தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் இதனைப் பாராட்டி, சிலைகளை மீட்ட காவல்துறை அலுவலர்களுக்கும், காவலர்களுக்கும் ரொக்கப் பரிசை வழங்கினார்.**

பொருளாதாரக் குற்றத் தடுப்புப் பிரிவின் காவல் துறைக் கூடுதல் இயக்குநர் மற்றும் காவல் குழுவினர் தங்களுக்குக் கிடைத்த நுண்தகவல் ஒன்றின் அடிப்படையில், தென் ஆர்க்காடு வள்ளலார் மாவட்டத்தில் சோதனை ஒன்றினை மேற்கொண்டு, விருத்தாச்சலம் புகைப்பட்டிக் கிராமத்தைச் சேர்ந்த உத்திரக் கவுண்டர் என்பவரைக் கைது செய்தார்கள். இதனைத் தொடர்ந்து மேற்கொண்ட புலன் விசாரணையின் விளைவாக, ஆரம்பச்சோழர் காலத்தை (12-வது மற்றும் 13-வது



★ ஒருவரின் கடமை மற்றவரின் மனதை நிறைவு செய்வதாக இருந்தால், அதுவே அதற்குக் கிடைத்த பரிசாகும்.

- சியார்ஜ் எலியட்

★ உறுதியும் அன்பும் நம்மிடம் தோன்றும் பெரிய கவலைச் சுமையை நீக்குவன.

-எமர்சன்

★ உள்ளமும் உடலும் தூய்மையாக இருக்கும் அளவைப் பொறுத்துதான், உடல் ஆரோக்கியமும் மனவளமும் அதிகரிக்கிறது.

நூற்றாண்டு) சேர்ந்த ஸ்கந்தர் சிலை ஒன்று கைப்பற்றப்பட்டது. பின்னர் மேற்கொள்ளப்பட்ட தொடர் நடவடிக்கைகள், சோழர் காலத்தைச் சேர்ந்த அதாவது 12-வது மற்றும் 13-வது நூற்றாண்டைச் சேர்ந்த

சந்திரசேகரர் சிலை
யோகசக்தி அம்மன் சிலை
தனி அம்மன் சிலை
சிவகாமி அம்மன் சிலை
பாலஸ்கந்தர் சிலை

- ஆகிய ஐந்து அபூர்வமான பஞ்சலோக சிலைகளைக் கைப்பற்ற வழிவகுத்தன.

பழமை அழகோடு பண்பாட்டுச் சின்னமாய் மிளிரும் இந்தச்சிலைகளில் தனி அம்மன் சிலை மட்டும் ஏறத்தாழ 3 அடி உயரம் உள்ளது. அடுத்துச்சந்திரசேகரர் சிலை சுமார் இரண்டரை அடி உயரமும், யோக சக்தி அம்மன் சிலை சுமார் ஒன்றரை அடி உயரமும், பாலஸ்கந்தர் சிலை முக்கால் அடி உயரமும் கொண்டுள்ளது.

புலன் விசாரணையில், கைப்பற்றப்பட்ட சிலைகள் விருத்தாச்சலத்தை அடுத்த நல்லூர் கிராமம் வில்வனேஸ்வரர் கோவிலைச் சேர்ந்தவை என்றும், 5.6.1995 அன்று களவாடப்பட்டவை என்றும் தெரியவந்தது.

காவல் துறைக் கூடுதல் இயக்குநர், திரு. எஸ்.ராஜகோபாலன் அவர்களின் தலைமையில் சிலைத் தடுப்புக் காவல் துறைப் பிரிவினரால் மீட்கப்பட்ட வெண்கலச் சிலைகளை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், தலைமைச் செயலகத்தில் பார்வையிட்டார். திருட்டுப் போன அந்தச் சிலைகளை மீட்கத் திறம்படப் பணியாற்றிய காவல் துறை அலுவலர்களுக்கும், காவலர்களுக்கும் தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்டார்.

விலை மதிக்கமுடியாத பஞ்சலோகச் சிலைகளை, களவாடப்பட்ட சில மாதங்களிலேயே கண்டுபிடித்து மீட்டதற்காகக் காவல் துறை இயக்குநர் திரு. வால்டர் தேவாரம் மற்றும் காவல் துறையின் பொருளாதாரக் குற்றப் பிரிவுக் கூடுதல் இயக்குநர் திரு எஸ்.ராஜகோபாலன், சிலைத் திருட்டுத் தடுப்புப் பிரிவு காவல்துறைக் கண்காணிப்பாளர் திரு லட்சுமணன், துணைக் கண்காணிப்பாளர் திரு ஆறுமுகம் மற்றும் தொடர்புடைய காவல்துறை அலுவலர்கள் மற்றும் காவலர்கள் ஆகியோருக்குத் தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், இந்த நல்ல பணியில் ஈடுபட்டு, சிலைகளை மீட்ட கீழ்க்கண்ட காவல் துறை அலுவலர்கள் மற்றும் காவலர்கள் ஒவ்வொருவருக்கும் தலா ரூ.5,000 ரொக்கப் பரிசு வழங்கினார்.

1. திரு காசிநாதன், ஆய்வாளர், 2. திரு ரங்காச்சாரி, உதவி ஆய்வாளர், 3. திரு டி.கலியபெருமாள், முதல் நிலைக் காவலர், 4. திரு ஏ.சேகர், முதல் நிலைக் காவலர், 5. திரு வி.குமார், காவலர், 6. திரு ஈ.ரவி சங்கர், காவலர், 7. திரு டி.காமராஜ், காவலர், 8. திரு எஸ்.ராஜேந்திரன், காவலர், 9. திரு வீரபரஞ்சோதி, காவலர், 10. திரு எம்.கிருஷ்ணமூர்த்தி, காவலர்

இந்த நிகழ்ச்சியின் போது தலைமைச் செயலாளர் திரு என்.ஹரிபாஸ்கர் மற்றும் உள்துறைச் செயலாளர் திரு ஆர்.வரதராஜுலு ஆகியோர் உடனிருந்தார்கள்.



# மக்களுக்குச் சீரிய சேவையே முதல் நோக்கம்

# காவல் துறையை மேம்படுத்திட மாண்புமிகு முதல்வர் பல்வேறு ஆணைகள்

**காவல்துறையின் முதல் நோக்கமான, மக்களுக்குச் சீரிய சேவை செய்வதை உறுதிப்படுத்தும் வகையில், உலகின் தலைசிறந்த காவல்பிரிவுகளில் ஒன்றான தமிழகக் காவல்துறையை, வளர்ந்துவரும் கம்ப்யூட்டர் யுகத்தின் வேகத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் நவீனப்படுத்தவும், காவல்துறையின் பல்வேறு நிலைகளில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் காவலர்களிடையே பணிச்சோர்வை நீக்கி, பணி ஆர்வத்தை அதிகப்படுத்தவும் பல்வேறு திட்டங்கள் வகுத்து ஓய்வின்றிப் பணியாற்றி வரும் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், காவல்துறையை மேம்படுத்திட, கடந்த திங்களில் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளும், பிறப்பித்த ஆணைகளும் வருமாறு:**

**குற்ற நிகழ்வைத் தடுக்க புள்ளி விவரம் அள்ளித்தர குற்றவியல் ஆவணப் பிரிவு**

குற்ற நிகழ்வைத் தடுத்து நிறுத்துவதற்கு உதவுகின்ற முறையிலும், குற்ற நிகழ்வுகள் தொடர்பான புள்ளி விவரங்கள் (Statistics) நாடு முழுவதும் (National Level) மாநில அளவிலும் (State Level) மற்றும் மாவட்டங்கள் அளவிலும் (District Level) ஒருங்கிணைக்கப்பட வேண்டும் என்றும், மாநில அளவில் இயங்குகின்ற மாநிலக் குற்றவியல் ஆவணப் பிரிவு (District Crime Record Bureau) காவல்துறைத் துணைத் தலைவர் ஒருவரின் (DIG of Police) தலைமையில் இயங்க வேண்டும் என்றும், தேசியக் காவல் குழு (National Police Commission) தனது பரிந்துரையில் குறிப்பிட்டுள்ளது.

அந்தப் பரிந்துரையின் அடிப்படையில் தமிழ்நாட்டிலும் மாநிலக் குற்றவியல் ஆவணங்கள் பிரிவு (State Crime Records Bureau) ஒன்றும் காவல் மாவட்டங்கள் அனைத்திலும், மாவட்டக் குற்றவியல் ஆவணப் பிரிவுகளும் (District Crime Records Bureau) அமைத்து அவற்றைத் தேசிய அளவிலும், மாநில அளவிலும், மாவட்டங்களுக்கு இடையேயும் ஒருங்கிணைக்க கருத்துரு ஒன்றினை அரசுக்குக் காவல்துறை இயக்குநர் வழங்கியிருந்தார். காவல் துறை இயக்குநரின் இந்தப் பரிந்துரைகளை முற்றிலுமாக ஏற்றுக்கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் மாநில அளவிலும், மாவட்ட அளவிலும், மாநகர அளவிலும் குற்றவியல் ஆவணப் பிரிவுகள் உடனடியாக அமைக்கப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பித்துள்ளார். இதன்படி,

அ. காவல் கணிணிப் பிரிவு (Computer Wing)

ஆ. கைரேகைப் பிரிவு (Finger Print Bureau)

இ. குற்றப் புலன் ஆய்வுப் பிரிவு மற்றும் குற்ற நிகழ்வு முறைப் பிரிவு(Modus Operandi Bureau, Criminal Investigation Department )

ஈ. புள்ளியல் பிரிவு (Stastical Cell)

இவற்றில் குற்றப் புலன் ஆய்வுப் பிரிவு, குற்ற நிகழ்வு முறை பிரிவு ஆகியவை குற்றப் பிரிவு காவல்துறைத் தலைவரின் நிர்வாகத்தின் (Inspector General of Police-Crime) கீழும்,புள்ளியல் பிரிவு காவல்துறை இயக்குநரின் நிர்வாகத்தின் கீழும், மாவட்டங்கள் மற்றும் மாநகரங்களிலுள்ள குற்றவியல் ஆவணங்கள் பிரிவுகள் அந்தந்த மாநகரக் காவல்துறை ஆணையாளர் மற்றும் மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் (Commissioner of Police & Superintendent of Police) நிர்வாகத்தின் கீழும் இயங்கும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் உத்தரவின்படி அமைக்கப்படவிருக்கும் மாநிலக் குற்றவியல் ஆவணங்கள் பிரிவு கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ளும்:

1. தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் (National and International) இயங்கி வருகின்ற குற்றவாளி மற்றும் குற்றம் இழைக்கும் நேர்வுகள் ஆகியவற்றைப் பற்றிய அனைத்து விவரங்களைத் திரட்டி குற்றப்புலன் ஆய்வில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அந்தத் தகவல்களைக் கொடுத்து உதவுதல்.

2. மாநிலங்களுக்கிடையேயான மற்றும் சர்வதேச அளவில் இயங்கி வருகின்ற இது போன்ற அமைப்புகளுடன் தொடர்பு கொண்டு குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கு உதவி செய்தல்

3. மாநில அளவில் குற்ற நிகழ்வுகளைப் பற்றிப் புள்ளி விவரங்களைச் சேகரித்து ஆய்வு செய்தல்.

4. தண்டனை முடிவு பெற்றக் குற்றவாளிகளுடைய மறுவாழ்வுக்காக, அவர்களின் தண்டனை முடிவுறுவதற்கு முன்பு விடுதலை செய்தல், ஜாமீனில் விடுதலை செய்தல் போன்ற நிகழ்வுகளில், சிறைத் துறையினர் செயல்படத் தக்க விவரங்களை அளித்தல்

5. மாவட்ட அளவில், இயங்கும் குற்றவியல், ஆவணங்கள் பிரிவுகளை ஒருங்கிணைத்து அவற்றை திறம்படி பணிபுரியச் செய்தல்

6. அப்பிரிவுகளில் பணிபுரிபவர்களுக்குத் தக்க பயிற்சியினை அளித்தல்

**எனது பேச்சுக்களுக்காக நான் பல முறை வருத்தப்பட்டதுண்டு. ஆனால், மௌனம் காத்தமைக்காக என்றைக்குமே வருந்தியதில்லை.**

**—பப்லியஸ் சைரஸ்**

7. குற்றவியல் ஆவணங்களைச் சேகரித்து, அவற்றை ஆய்வு செய்தல்

போன்ற பணிகளைப் புதிதாக அமைக்கப் படவிருக்கும் மாநிலக் குற்றவியல் ஆவணங்கள் பிரிவு மேற்கொள்ளும்.

## சிறிய தவறுக்குப் பெற்ற தண்டனை முழுமையாக ரத்து

காவல்துறையில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் காவலர்கள் பணியில் சேர்ந்த புதிதில் அனுபவமின்மை காரணமாக, சில சிறிய தவறுகளுக்காகப் பெற்ற தண்டனைகளை முழுமையாக ரத்து செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்த இந்தத் தீபாவளி பரிசுத் திட்டத்தின்படி 1985-ஆம் ஆண்டிலிருந்து 1995-ஆம் ஆண்டு வரை, அதாவது கடந்த 10 ஆண்டுக் காலகட்டத்தில் எந்தவிதமான தண்டனைகளுக்கும் உள்ளாகாமல், நன்முறையில் செயலாற்றியவர்களுக்கு 1985 ஆம் ஆண்டுக்கு முன்பாக வழங்கப்பட்ட சிறு தண்டனைகளான, கண்டனக் குறிப்புகள் (Censure) கரும்புள்ளிகள் (Black Marks) மற்றும் கண்டனக் கடிதங்கள் (Reprimanding) போன்றவைகள் ஒட்டுமொத்தமாக நீக்கப்படும்.

புதிதாகப் பணியில் சேர்ந்திருந்த சூழ்நிலையில், அனுபவமின்மை காரணமாக

# 'கட்டபொம்மன்'; 'சிதம்பரனார்' சிறப்பு நீர்நிலை மேம்பாட்டுத் திட்டம்: ரூ. 42 கோடிக்கு மேம்பாடு

திருநெல்வேலி கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் மாவட்டங்களில் ஏறத்தாழ 120 கிராமங்கள் பயன்பெறும் வகையிலான, 42 கோடி ரூபாய் செலவிலான டேனிடா (DANIDA) உதவி பெறும் சிறப்பு நீர்நிலைகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஒப்புதலளித்துள்ளார்.

விவசாயத்திற்காக நீர்நிலைகளைக் கண்டறியவும், அவற்றைப் பாதுகாக்கவும், முறையாகப் பயன்படுத்தப்படவும் உதவுகின்ற இத்திட்டம் இந்திய அரசுக்கும், டென்மார்க் நாட்டிற்கும் இடையிலான ஒப்பந்தத்தின் மூலம் செயலாக்கம் பெற்றது.

திருநெல்வேலியில் இத்திட்டத்தின் முதற்கட்டம் வெற்றிகரமாக நிறைவேறியுள்ளதால், இரண்டாவது கட்டப் பணிக்கும் டென்மார்க் நாடு, தமிழக அரசுக்கு நிதியளிக்க முன் வந்துள்ளது. இதன்படி, டென்மார்க் அரசு வழங்கியுள்ள 32 கோடி ரூபாய் நிதி உதவியுடன், தமிழ்நாடு அரசு வழங்குகின்ற 10 கோடி ரூபாய் நிதியும் சேர்த்து ஏழு ஆண்டுகளில் நிறைவேற்றவுள்ள 42 கோடி ரூபாய் செலவிலான இத்திட்டத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஒப்புதலளித்து ஆணையிட்டுள்ளார்.

---

ஏற்பட்ட சிறிய தவறுகளுக்கு வழங்கப்பட்ட தண்டனைகளை, அவர்கள் பணியில் சேர்ந்த பின்னர் 10 ஆண்டுகளில் புரிந்த சிறப்பான பணியைப் பாராட்டும் வண்ணம், அந்தச் சிறு தவறுகளுக்குண்டான தண்டனைகளை நீக்கி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பிறப்பித்துள்ள இந்த ஆணை, காவல்துறையில் பணிபுரியும் பல்வேறு அலுவலர்களுக்கும், காவலர்களுக்கும் மேலும் பணி ஆர்வத்தை உயர்த்துவதற்கும், அவர்களின் பதவி உயர்வுகளுக்கும் வழிவகுக்கும்.

காவல்துறையின் பல மட்டங்களில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் காவலர்கள், காவல் பணியில் உள்ள பணியின் கடினமான தன்மையைப் புரிந்து கொள்வதற்கு முன்பாக தாங்கள் பெற்றுவிட்ட தண்டனைகள், தற்போது தங்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கும்போதும், விருதுகள் போன்றவை வழங்கப்படும் போதும் ஒரு நிரந்தர இடையூறாக அமைந்து விட்டதைச் சுட்டிக்காட்டி, இந்தக் குறையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாயுள்ளத்துடன் தீர்த்து வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருந்தனர். பல அலுவலர்கள் மற்றும் காவலர்களின் 10 ஆண்டுப் பணிகளின் ஆவணங்களைப் பார்வையிட்டு ஆய்வு செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், அந்த அலுவலர்கள் மீது 1985-ஆம் ஆண்டுக்கு முன்பு மிகச் சிறிய தவறுகளுக்காக வழங்கப்பட்ட தண்டனைகள் அவர்களது எதிர்காலத்தைப் பாதிப்பதை அறிந்து, அவர்களது கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, இதுவரை எந்த ஒரு அரசாங்கத்தாலும் பிறப்பிக்கப்படாத இந்த ஆணையை வழங்கியுள்ளார்.

1985-ஆம் ஆண்டுக்கு முன்பு பெற்ற சிறிய தண்டனைகள் தங்களது எதிர்காலத்தைப் பாதிக்கும் என்று தெரியாமல் அனுபவமின்மை காரணமாக மேல்முறையீடு செய்யாமல் விட்டுவிட்ட பல நல்ல திறமையான அலுவலர்களின்

எதிர்காலப் பதவி உயர்வுக்கு இந்த ஆணை ஒரு வரப்பிரசாத மாக அமையும்.

**மணியாச்சியில் புதிய காவல் உட்கோட்டம்**

சிதம்பரனார் மாவட்டம் மணியாச்சியில் ஒரு புதிய காவல் உட்கோட்டம் (Police Sub-Division) ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்று காவல்துறை இயக்குநர் அனுப்பிவைத்த செயற்குறிப்பினை ஏற்றுக் கொண்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் மணியாச்சிப் பகுதியில் ஒரு புதிய உட்கோட்டத்தை ஏற் படுத்தி ஆணை பிறப்பித் துள்ளார். இதனால், அந்தப் பகுதியில் வாழும் மக்களுக்கு, காவல் துறையினரின் சேவை விரிந்து கிடைக்க இது வழி வகுக்கும்.

தற்போது தூத்துக்குடி காவல் உட்கோட்டத்திலுள்ள மணியாச்சி, நாரைக்கிணறு, ஒட்டப்பிடாரம் மற்றும் பசுவத்தானை ஆகிய காவல் நிலையமும், கோவில்பட்டி காவல் உட்கோட்டத்திலுள்ள கடம்பூர் காவல் நிலையமும் சேர்க்கப்பட்டு இந்தப் புதிய மணியாச்சி காவல் உட்கோட்டம் செயல்படும்.

**கரியலூரில் புதிய காவல் நிலையம்**

கடந்த *23.8.1995* அன்று சென்னையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையில், நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் ஆகியோரின் மாநாட்டில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் விழுப்புரம் ராமசாமி படையாச்சியார் மாவட்டம் கல்ராயன் மலைப் பகுதி யிலுள்ள கரியலூர் என்ற இடத்தில் புதிய காவல் நிலையம் ஒன்று அமைக்கப்படும் என்று அறிவித்திருந்தார்.

கல்ராயன் மலைப் பகுதியில் அமைந்துள்ள கரியலூர், விழுப்புரம் ராமசாமி படையாச்சியார் மாவட்டத் திற்கும், சேலம் மாவட்டத்திற்கு இடைப்பட்ட எல்லைப் பகுதி யில் அமைந்துள்ளது. இந்தக் கல்ராயன் மலைப் பகுதியில் 50 கிராமங்களும், 140 குக்கிராமங்களும் உள்ளன. இவை அனைத்துமே தற்போது கச்சிராப்பாளையம் காவல் நிலையத்தின் நிர்வாக ஆளு கைக்குள் அடங்கும். இந்தக் கரியலூர் பகுதியானது கச்சிராப் பாளையத்திலிருந்து 27 கிலோ மீட்டருக்கு அப்பால் அமைந் துள்ளது. ஆகவே, இந்த மலைப்பகுதியில் வாழும் மக்கள் தங்களுடைய பிரச்சினைகளைக் காவல் நிலையத்திற்கு எடுத்துச் சென்று, தீர்வு காண, சிரமப் படுகிறார்கள் என்பதை மாவட்ட ஆட்சித்தலைவர் மூலம் அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், கல்ராயன் பகுதியில் உள்ள கரியலூரில் ஒரு முழுமையான காவல் நிலையம் அமைக்க ஒப்புதல் வழங்கி அதற்காக நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார்.

இந்தப் புதிய காவல் நிலையத்தில் பணிபுரிய ஒரு உதவி ஆய்வாளர், இரண்டு தலைமைக் காவலர்கள், *3* முதல்நிலைக் காவலர்கள் மற்றும் 16 இரண்டாம் நிலைக் காவலர்கள் பணியிடங்களை ஏற்படுத்தி ஆணை வழங்கப் பட்டுள்ளது. மேலும் இந்தக் காவல் நிலையத்தின் உபயோ கத்திற்குப் புதிய ஜீப், தொலை பேசி, VHF தொலைத்தொடர்பு வசதி, மேஜை, நாற்காலிகள் மற்றும் ஆயுதங்கள் ஆகியவற்றை வாங்க 7,50,000 ரூபாய் ஒதுக்கீடு செய்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணைபிறப்பித்துள்ளார்.

**சீவலப்பேரி காவல் நிலையம் ரூ.5 இலட்சம் ஒதுக்கீடு**

திருநெல்வேலி கட்ட பொம்மன் மாவட்டத்திலுள்ள கங்கைக்கொண்டான் காவல் நிலையப் பகுதியைச் சார்ந்த மக்கள் சீவலப்பேரி காவல் நிலையமானது ஒரு முழுமை யான காவல் நிலைய் அந்தஸ் திற்கு உயர்த்தப்பட வேண்டு மென்ற கோரிக்கையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு மனுக்கள் வாயி

**உலகம் உனக்கு கடமைப் பட்டுள்ளதா ? அறிஞர் மார்க் ட்வெயினின் கருத்தறிய 36 ஆம் பக்கத்தைப் புரட்டிப் பாருங்கள்**

# வந்து குடியேறிய பம்பாய்த் தமிழர் வாழ்வு மணக்க முதல்வர் நிதி உதவி

**கடந்த 1993-ஆம் ஆண்டு மகாராஷ்டிர மாநிலத்தின் தலைநகரான பம்பாய் நகரில் நடைபெற்ற இனக் கலவரங்களால் பாதிக்கப்பட்டு, தங்கள் உடைமைகளை இழந்து தமிழ்நாட்டில் வந்து குடியேறிய பம்பாய்த் தமிழர்களின் புது வாழ்விற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், கடந்த ஆண்டு 62 பம்பாய்த் தமிழர் குடும்பங்களுக்குத் தலா 3,000 ரூபாய் வீதம் 1,86,000 ரூபாய் நிதி உதவி வழங்கினார்.**

**தற்போது, செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம் மேலமுதலம்பேடு என்ற கிராமத்தில் வசிக்கின்ற திரு கே. வீரராகவன் மற்றும் சிதம்பரனார் மாவட்டம் திருச்செந்தூர் வட்டம் ஆழ்வார்திருநகர் கிராமத்தில் வசிக்கும் திரு ராமசாமி ஆகிய இரண்டு பம்பாய்த் தமிழர்களும், தாங்கள் மிகவும் வறுமையில் வாடுவதாகவும், தங்களுக்கும் நிதி உதவி ஏதேனும் வழங்கப்பட வேண்டும் என்றும் கோரி கருணை மனு ஒன்றினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு அனுப்பி வைத்திருந்தார்கள். அவர்களது கருணை மனுக்களைப் பரிவோடு பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், அம்மனுதாரர்களின் நல்வாழ்விற்காக முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து தலா 3,000 ரூபாய் நிதி உதவி வழங்க ஆணை பிறப்பித்துள்ளார்.**

---

லாகவும், கடிதங்கள் வாயிலாகவும் ஏற்கெனவே தெரிவித்திருந்தார்கள்.

தற்போது சீவலப்பேரியில் இயங்கி வருகின்ற புறக்காவல் நிலையத்தில் ஒரு தலைமைக் காவலரும், 6 இரண்டாம் நிலைக் காவலர்களும் பணிபுரிந்து வருகின்றனர். இந்தப் புறக்காவல் நிலையமானது அதற்கு அருகாமையிலுள்ள 7 கிராமங்களையும், 14 குக்கிராமங்களையும் நிர்வகித்து வருகின்றது.

இந்தப் பகுதியில் வாழுகின்ற பொதுமக்களுக்குக் காவல்துறையினரின் சேவை அதிக அளவில் கிட்டுவதற்கும், காவல்துறை சீவலப்பேரிப் பகுதியில் அடிக்கடி திருவிழாக்கள் நடைபெறுவதற்குத் தேவையான பாதுகாப்புப் பணிகளை வழங்குவதற்கும், குற்றத் தடுப்புப் பணிகளைத் தீவிரப்படுத்தவும், சீவலப்பேரி புறக்காவல் நிலையத்தை ஒரு முழுமையான காவல் நிலையமாக மாற்றி அதற்குத் தேவையான பணியாளர்கள், உபகரணங்கள் ஆகியவற்றை வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.


இந்தக் காவல் நிலையத்திற்காக ஒரு உதவி ஆய்வாளர், ஒரு தலைமைக் காவலர், 3 முதல் நிலைக் காவலர்கள், 10 இரண்டாம் நிலைக் காவலர்கள் மற்றும் ஒரு ஓட்டுநர் பதவிகள் ஏற்படுத்தி ஆணை வழங்கப்பட்டுள்ளன. மேலும், இந்தக் காவல் நிலையத்தின் உபயோகத்திற்கு ஒரு ஜீப், தொலைபேசி, ஆயுதங்கள் போன்றவற்றை வழங்குவதற்கும் 5,00,000 ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

முழுமையான சீவலப்பேரி காவல் நிலையத்தின் நிர்வாக எல்லைகளுக்குள் குறவர் மனக்காடு, நொச்சிக்குளம், காஞ்சிபுரம், கீழதொணித்துறை மற்றும் மேலதொணித்துறை ஆகிய கிராமங்களும் கூடுதலாக கொண்டு வரப்படும்.

பொதுப்பணி நெடுஞ்சாலைத்துறை

# மறைந்த அரசு ஊழியரின் வாரிசுகளுக்கு அரசுப்பணி

## மாண்புமிகு முதல்வருக்கு நன்றி



மறைந்த அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்குக் காலதாமதமின்றி அரசுப்பணி அளித்திட வேண்டும் என்னும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் உத்தரவிற்குச் செயல் வடிவம் அளித்திட, மாண்புமிகு பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு நெடுஞ்சாலைத் துறையில் காலியாக உள்ள பணியிடங்களில் 56 இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள் பணிநியமன உத்தரவினை மறைந்த அரசு ஊழியரின் வாரிசுதாரர்களுக்கு 16.10.1995 அன்று அளித்தார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான ஆட்சியில் நெடுஞ்சாலை கிராமப் பணித்துறையில் மட்டும் 86 இளநிலை உதவியாளர்கள், 88 அலுவலக உதவியாளர்கள், 20 உதவிப் பொறியாளர்கள் மற்றும் 13 உதவி வரைதொழில் அலுவலர்கள் என்று பல்வேறு பணித் தொகுதிகளின் 207 வாரிசுதாரர்களுக்குக் கருணையின் அடிப்படையில் பணிநியமன உத்தரவு இதுவரை வழங்கப்பட்டுள்ளது. 101 இளநிலை உதவியாளர்கள் மற்றும் 16 உதவிப் பொறியாளர்கள் பதவிக்கான விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளன.

தங்களது நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டதற்கு, நியமன உத்தரவு பெற்ற வாரிசுதாரர்களும், அவர்களது சுற்றத்தாரும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கும் மற்றும் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்கும் தங்களது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்கள்.

இது குறித்து மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள், தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு, தனது பணியாளர்களின் நலன் காக்கவும் வாழ்க்கை மேம்பட வழிவகை செய்யவும் ஏனைய அரசுகளுக்கு முன்னோடியாக அமைந்துள்ளது என்று தெரிவித்தார்.

இந்த உலகம் உன்னை வாழ வைக்கக் கடமைப்பட்டு இருக்கிறது என்று சொல்லிக் கொண்டு திரியாதே. இந்த உலகம் உனக்கு எந்த வகையிலும் கடமைப்பட்டு இருக்கவில்லை. உனக்கு முன்பிருந்தே அது இங்கு இருக்கிறது.

—மார்க் டுவைன்

# மத்திய திட்டக்குழு ஒப்புதல்

# நீர் ஆதாரங்களை மேம்படுத்த ரூ.808 கோடிக்குப் புதிய திட்டம்

தமிழ்நாட்டின் வேளாண்மை உற்பத்திப் பெருக்கத்திற்கும், தரிசாகக் கிடக்கின்ற நிலங்களை வேளாண்மைக்குக் கொண்டு வருவதற்கும், தற்போதுள்ள நீர் நிலைகளை நன்முறையில் பராமரிப்பதோடு, புதிய நீர் ஆதாரங்களைக் கண்டுபிடித்து அவற்றை நன்முறையில் மேம்படுத்த வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அறிவித்திருந்தார்கள்.

அதன்படி, தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு நீர் நிலைகளையும், நீர் ஆதாரங்களையும் சிறப்பான முறையில் மேம்பாடு செய்வதற்காக 'தமிழ்நாடு ஒருங்கிணைந்த நீர் ஆதாரங்கள் திட்டம்' (Tamil Nadu Water Resoures Consolidated Project) ஒன்றை 808 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தயாரித்து மத்திய திட்டக் குழுவிற்கு ஒப்புதலுக்காகத் தமிழக அரசு அனுப்பி வைத்திருந்தது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட பெரும் முயற்சியால் மத்திய திட்டக் குழு இந்த மிகச்சீரிய திட்டத்திற்கு, தனது ஒப்புதலை அளித்துள்ளது. இந்தத் தகவலை மத்திய நீர் ஆதாரங்கள் துணையின் இணை அமைச்சர் திரு பி.வி. ரங்கையா நாயுடு அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டம், தமிழகத்தில் செயல்படுத்தப்படும்போது கிராமப் பகுதியிலுள்ள பல்வேறு பெரிய மற்றும் சிறிய நீர் ஆதாரங்கள் நன்முறையில் பராமரிக்கப் படுவதோடு, அதிலிருந்து கிடைக்கின்ற பாசன நீர், தமிழகத்தின் வேளாண்மைக்கும், வேளாண் உற்பத்திக்கும் வழி வகுக்கும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

---

**ரூ.18.4 இலட்சம் நிதி ஒதுக்கீடு**

# பாப்பன்குளத்திலும், ஆலப்பாளையத்திலும் ஆரம்பச் சுகாதார நிலையங்கள்

தமிழ்நாட்டில் கிராமப் பகுதிகள் அனைத்திலும் மருத்துவ வசதியை அனைத்துத் தரப்பு மக்களுக்கும் விரைந்து கொண்டு செல்லப்பட வேண்டும் என்னும் குறிக்கோளுடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் மருத்துவத் துறைக்கு அதிக முக்கியத்துவத்தை அளித்து செயல்பட்டு வருகிறார்.

இதன் அடிப்படையில், மாணவ, மாணவியர்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகளுக்கு மாணவ மாணவியர் சிறப்பு மருத்துவ முகாம்களை நடத்துதல் போன்ற பல்வேறு புதிய திட்டங்களை நடைமுறைப் படுத்தி வருவதோடு, கிராமப் புறங்களிலும் தேவையான அளவிற்கு ஆரம்பச் சுகாதார நிலையங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற கொள்கையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிகுந்த ஈடுபாட்டைக் காட்டி வருகின்றார்.

இதே நோக்கில் தற்போது, கோயம்புத்தூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை வட்டத்தில் உள்ள பாப்பன்குளம், பெரியார் மாவட்டம், பவானி வட்டத்தில் உள்ள ஆலம் பாளையம் ஆகிய இரண்டு இடங்களிலும் ஆரம்பச் சுகாதார நிலையங்களை (Primary Health Centre) அமைக்க 18.4 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், ஆணை பிறப்பித்துள்ளார். இவ்விரு இடங்களிலும் கட்டுமானப் பணிகள் விரைந்து மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

# வீட்டுவசதி மேம்பாட்டுப் பணிகளைப் பாராட்டி தமிழ்நாட்டுக்கு இரண்டு தேசிய விருதுகள்!

## 80 ஆண்டுக் காலத்தை 4 1/2 ஆண்டு மிஞ்சியது!

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் சீரிய தலைமையின் கீழ் கடந்த $4\frac{1}{2}$ ஆண்டுக்காலக் கட்டத்தில், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் (Tamil Nadu Co-operative Housing Federation) மொத்தம், 2,65,000 புதிய வீடுகள் கட்டுவதற்காக, இதுவரை 646 கோடி ரூபாய் மதிப்புடைய வீட்டுவசதி கடன்தொகையை வழங்கி, இந்தியத் துணைக் கண்டத்தில் முதல் இடத்தைப் பிடித்து, தேசிய அளவில் ஒரு மாபெரும் சாதனை படைத்துள்ளது.

மாநில அளவில், வீட்டுவசதி மேம்பாட்டிற்காகப் பணியாற்றி வருகின்ற தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையமானது, தனது 80 ஆண்டுக் காலச் சேவையில் அதாவது 1910-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது முதல் 1990 வரையிலான கால கட்டத்தில் மொத்தம் 578 கோடி ரூபாய் மதிப்புள்ள தொகையைத்தான், 4,80,000 வீடுகள் கட்டுவதற்குக் கடன் உதவி வழங்கியுள்ளது.

தனது 80 ஆண்டு காலச் சேவையில் வழங்கிய கடனுதவியான 578 கோடி ரூபாயை விட அதிகமாக, கடந்த $4\frac{1}{2}$ ஆண்டுக் காலத்தில் 646 கோடி ரூபாயாக வழங்கி, இமாலயச் சாதனையைத் தற்போது தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் சாதித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்க தாகும்.

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையமானது, இதுவரை 1,224 கோடி ரூபாய் கடனுதவித் தொகையை வழங்கி, அதாவது ஏனைய மாநிலங்களில் இயங்கி வரும் அனைத்து மாநிலக் கூட்டுறவு வீட்டுவசதி இணையங்களும் சேர்ந்து வழங்கியுள்ள தொகையை விட 50 சதவிகிதம் அதிகமாக வழங்கியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்க சாதனை ஆகும்.

தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வீட்டுவசதி இணையம், தேசிய அளவில், அனைத்து மாநிலங்களைக் காட்டிலும் மிகச் சிறந்த பணியினை ஆற்றி, சீரிய சாதனையைப் படைத்துள்ளதை பாராட்டி மத்திய அரசின் வீட்டுவசதி இணை அமைச்சர் மாண்புமிகு திரு எஸ்.எஸ். அலுவாலியா அவர்கள் தலைமையில் 13.10.95 அன்று டெல்லியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் 1994-95-ஆம் ஆண்டிற்கான "தேசிய விருது" (National Award) தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்திற்கு வழங்கப்பட்டது. தமிழகத்தின் சார்பில் மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு எஸ். ரகுபதி அவர்கள் இந்த விருதினைப் பெற்றுக் கொண்டார்.

இதே விழாவில், கிராமிய வீட்டுவசதித் திட்டத்தைச் (Rural Housing Scheme) சிறந்த முறையில் நிறைவேற்றியதற்காக, 'தேசிய





'விருது' தர்மபுரி மாவட்டத்திலுள்ள பாலக்கோடு வட்டக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்திற்கு வழங்கப்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், கிராமிய அளவிலே வீட்டுவசதியை மேம்படுத்த மிகச் சிறந்த சேவையினைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ஆற்றியமைக்காக, அவரது திருப் பெயரில் "டாக்டர் ஜெ.ஜெயலலிதா விருது" (Dr.J.Jayalalitha Award) என்ற தேசிய விருது ஏற்படுத்தப்பட்டுள்ளது. அந்த விருதானது இந்த முறை பாலக்கோடு வட்டக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்திற்கு வழங்கப்பட்டது. இந்த விருதினையும், தமிழகத்தின் சார்பாக மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு எஸ். ரகுபதி அவர்கள் பெற்றுக் கொண்டார்.

தேசிய அளவிலான இரண்டு பெரிய விருதுகளையும், கூட்டுறவு வீட்டுவசதித் துறையில், தமிழகம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையின் கீழ் வென்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தத் தேசிய அளவிலான இரண்டு விருதுகளையும் மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களிடம் நேரில் காண்பித்து ஆசி பெற்றார்.

வட்ட அளவில், கிராமிய வீட்டுவசதித் திட்டத்தைச் சிறப்பான முறையில் நிறைவேற்றும் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்திற்கு விருது வழங்க, "தேசிய கூட்டுறவு வீட்டுவசதி இணையம்" (National Co-operative Housing Federation) முடிவு செய்தபோது, தமிழ்நாடு வீட்டுவசதி இணையம் 10 இலட்சம் ரூபாய் பங்குத் தொகை வழங்கியதையும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் சீரிய சேவையைப் பாராட்டி, அவர்தம் திருப் பெயரிலேயே இந்த விருது வழங்கப் பட்டதாகவும், அந்த விருதினை முதல் ஆண்டில் தமிழ்நாடே பெற்று வந்ததையும், மாண்புமிகு தமிழக முதலமைச்சரிடம், மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் எடுத்துரைத்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், இந்தச் சாதனை தொடர்ந்திட வேண்டும் என்றும், தொடர்ந்து இதுபோன்று விருதுகளைத் தமிழகம் பெற்றிட வேண்டும் என்றும் இந்தச் சாதனைக்குக் காரணமான அலுவலர்கள் அனைவருக்கும் தனது பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணைப்படி

# ஆதிதிராவிட மகளிர் நலன்காக்க அரும்பெரும் திட்டங்கள் செயலாக்கம்!

தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் தங்களது வாழ்க்கையில் ஒட்டுமொத்த முன்னேற்றத்தினை விரைந்து பெற வேண்டும் என்பதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் அறிவுரையின் பேரில், தமிழக அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. ஆதி திராவிடர் பொருளாதார முன்னேற்றத்திற்காகக் கடந்த திங்களில் அறிவிக்கப்பட்ட சில முக்கிய திட்டங்கள் மற்றும் நிதி ஒதுக்கீடு பற்றிய விவரம் வருமாறு:

**சிறுசேமிப்பை ஊக்குவிக்க சிறப்புமிகு திட்டம்**

ஆதிதிராவிடர் மகளிரிடையே சிறுசேமிப்புப் பழக்கத்தை ஊக்குவித்திட சீரிய திட்டம் ஒன்றைத் தமிழக அரசு விரைவில் செயல்படுத்தும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அறிவித்திருந்தார். இதன்படி தற்போது தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ஒரு இலட்சம் ஆதி திராவிடர் மகளிர் சிறுசேமிப்புத் திட்டத்தின் மூலமாக மானியத்தின் அடிப்படையில் பயன்பெறும் வகையில் 2.5 கோடி ரூபாய் மானியத்தோடு கூடிய நிதியினை வழங்கி ஆணை பிறப்பித்துள்ளார்.

தமிழகச் சிறுசேமிப்புத் துறை இயக்குநரால் செயல்படுத்தப் படவுள்ள இத்திட்டத்தின்படி 1000 ரூபாய் மதிப்புள்ள தேசிய சிறுசேமிப்புப் பத்திரம் வாங்குகின்ற பயனாளி ஒருவர் 750 ரூபாய் செலுத்த வேண்டும், மீதி 250 ரூபாய் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் TAHDCO மானியமாக வழங்கப்படும். இதேபோன்று 500 ரூபாய்க்கான தேசிய சிறுசேமிப்புப் பத்திரம் வாங்குவோர் ரூ.375ஐ பயனாளி பங்காகச் செலுத்த வேண்டும். மீதி 125 ரூபாயை, தாட்கோ TAHDCO மானியமாக வழங்கும். தேசியச் சிறுசேமிப்புப் பத்திரத்தில் முதலீடு செய்பவர்களுக்குச் சிறுசேமிப்புத் துறையால் ஊக்கப் பரிசுத்தொகை வழங்கப் படும்.

**32 ஆயிரம் பெண் பயனாளிகளுக்கு ரூ.2.3 கோடி உதவி**

1995-96-ஆம் ஆண்டில், 10,000 இந்து ஆதிதிராவிடப் பெண்கள் ஒவ்வொருவருக்கும், ரூ.1,500 மதிப்புள்ள கலப்பு இன பசுங்கன்று ரூ.150 இலட்சம் செலவிலும், 10,000 இந்து ஆதிதிராவிடப் பெண்களுக்கு நபர் ஒன்றுக்கு முட்டை கொடுக்கும் 5 பெண் மற்றும் 1 ஆண் ஆசில் இனக் கோழிப் பறவை ரூ.12 இலட்சம் செலவிலும், 10,000 இந்து ஆதிதிராவிடப் பெண்களுக்கு நபர் ஒன்றுக்கு 10 கிரிராஜா கறிக்கோழிப் பறவைகள் ரூ.72 இலட்சம் செலவிலும் இலவசமாக வழங்கவும்,

2,000 இந்து ஆதிதிராவிடப் பெண்களுக்கு இவற்றை வளர்ப்பது குறித்து பயிற்சி அளிக்க ரூ.4 இலட்சமும்

ஆக மொத்தமாக ரூ.238 இலட்சம் ஒதுக்கி அரசு ஆணை யிட்டுள்ளது.

இந்த 32,000 ஆதிதிராவிடப் பெண் பயனாளிகளை மாவட்ட ஆட்சியர் தலைமையில் உள்ள குழு தேர்ந்தெடுக்கும். இந்தத் திட்டம் கால்நடைத் துறை இயக்குநரால் நிறைவேற்றப் படும்.

**8,500 பேருக்கு தலா ஒரு ஜோடி கறவை மாடு**

பொருளாதாரத்தில்

பின் தங்கியுள்ள ஆதிதிராவிட விவசாயிகள் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்வதற்காக, தமிழக அரசு அறிவித்துள்ள பல்வேறு திட்டங்களில் கறவை மாடுகள் வழங்கும் திட்டமும் ஒன்றாகும். இத்திட்டத்தின் கீழ் 1995-96-ஆம் ஆண்டில் 8,500 ஆதிதிராவிட பயனாளிகள், ஒவ்வொருவரும் ஒரு ஜோடி கறவை மாடுகள் பெறுவார்கள். இத்திட்டத்திற்காக மத்தியச் சிறப்பு நிதியிலிருந்து மானியத்தொகை யாக ரூ.510 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஆதிதிராவிடக் குடியிருப்புகளுக்கு மின் வசதி**

தமிழ்நாட்டில் ஆதிதிராவிட மக்கள் வசிக்கின்ற குடியிருப்புகளுக்கும், அவர்களது குடிசைகளுக்கும் அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து தருகின்ற திட்டம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் அறிவுரையின்படி விரைவாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கும், குடிசைகளுக்கும் மின் வசதி செய்து தருகின்ற திட்டத்தின்கீழ் மொத்தம் 69,000 குடிசைகளுக்கு மின் வசதி செய்து தருவதற்காகவும், 50 சதவிகிதம் முன்பணமாக 3.45 கோடி ரூபாயினை 1994-95-ஆம் ஆண்டே தமிழ்நாடு மின்வாரியத்திற்கு வழங்கப்பட்டு பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. எஞ்சியுள்ள ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கும், குடிசைகளுக்கும் மின் வசதி செய்து தர வேண்டும் என்பதற்காக 1995-96-ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடாக 3.45 கோடி ரூபாய் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார். ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு மின் வசதி அளிக்கின்ற பணிகள் விரைந்து நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

## வேளாண் திட்டம் செயல்படுத்த உதவி

ஆதிதிராவிட வகுப்பினைச் சார்ந்த சிறு மற்றும் குறு விவசாயிகளின் உற்பத்தி உத்திகளை உயர்த்தவும், உற்பத்தி அணுகு முறைகளில் மாற்றங்களைக் கொண்டு வரவும், 'தாட்கோ' நிறுவனத்தின் மூலம் பல்வேறு வேளாண்மைத் திட்டங்களுக்கு 50 சதவிகிதமும், சில இனங்களுக்கு 25 சதவிகிதமும் மானியமாக வழங்க, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

மானிய உதவி பெறுகின்ற வேளாண்மைத் திட்டங்கள் வருமாறு:

★ கலப்பின மற்றும் உயர் விளைச்சல் தரக்கூடிய இரசாயனப்பதப்படுத்தப்பட்ட நெல், மக்காச் சோளம், சிறுதானியங்கள், எண்ணெய் வித்துக்கள், பருத்தி மற்றும் காய்கறிகள் ஆகிய விதைகளைப் பாக்கெட்டுகளில் வழங்குதல்.

★ விதைகளைப் பூச்சிக் கொல்லி இரசாயனங்களால் விவசாயிகளே நேர்த்தி செய்து பயன்படுத்திக் கொள்ள ஏதுவாக விதைப் பதப்படுத்தும் இரசாயன பூச்சிக் கொல்லி மருந்துகளை அவற்றைப் பயன் படுத்தும் முறையோடு தனியாகப் பாக்கெட்டுகளில் விநியோகம் செய்தல்

★ உயிரின வேம்பு அடிப்படையிலான பூச்சிக்கொல்லிகள் மற்றும் பூச்சிக்கொல்லித் தாவரங்கள் வழங்குதல்

★ உயிரின உரங்கள் வழங்குதல்

★ நெற்பயிர்களுக்கு ஜிங்க் சல்பேட் வழங்குதல்

★ நுண்ணூட்டச் சத்துக்கள் கலவை வழங்குதல்.

—முதலான வேளாண் திட்டங்களுக்கு மானியத் தொகை வழங்கப்படும்.

# 1.06 கோடி மதிப்புடைய ஜெர்சி பசுக்கள் டென்மார்க் நாட்டிலிருந்து தமிழ் நாட்டுக்கு வந்தன




தமிழ்நாட்டில் கால்நடை அபிவிருத்திக்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் ஆலோசனையின் பேரில், தமிழகக் கால்நடைப் பராமரிப்புத் துறை பல வகையான திட்டங்களை, அரசு நிதி உதவியினைக் கொண்டும், உலக வங்கி, DANIDA போன்ற அயல்நாட்டு அமைப்புகளின் நிதி உதவியினைக் கொண்டும் நிறைவேற்றி வருகின்றது. குறிப்பாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், கால்நடை அபிவிருத்தியானது கிராமப் பொருளாதாரத்தை எங்ஙனம் வளர்ச்சியுறச் செய்யும் என்பதை விளக்கிப் பல்வேறு தருணங்களில் குறிப்பிட்டுள்ளார்கள். கிராமப்புறங்களில் வசிக்கும் மக்களின் வருமானத்தை அதிகரித்து, அவர்தம் பொருளாதார மேம்பாட்டிற்கு வழிவகுக்க,த்தற்போதைய நவீன கால்நடைப் பராமரிப்புத் தொழில் நுட்ப உதவிகளைக் கையாள வேண்டும் என்ற கருத்தினை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆலோசனையின் பெயரில் தமிழகக் கால்நடைப் பராமரிப்புத் துறை, டென்மார்க் நாட்டிலிருந்து 120 ஜெர்சி இன உயர் ரக சினைப் பசுக்களை இறக்குமதி செய்துள்ளது. உலக வங்கியின் நிதி உதவியுடன், தமிழ் நாடு வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், பால் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்தோடு, உயர் மரபு அபிவிருத்திக்காக இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இவ்வுயர் ரக ஜெர்சி பசுக்களின் மொத்த மதிப்பு 1.06 கோடி ரூபாய் ஆகும்.

17.10.1995 அன்று இரவு டென்மார்க் நாட்டிலிருந்து சென்னைக்குத் தனி விமானத்தில் இந்த ஜெர்சி உயர் ரக பசுக்கள் வந்து இறங்கின. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர், திரு.கு.ப. கிருஷ்ணன் அவர்களும், மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர், திரு.எம்.சி.. தாமோதரன் அவர்களும் இந்தப் பசுக்களை, தமிழக அரசின் சார்பில் பெற்றுக் கொண்டார்கள். சென்னையிலிருந்து இந்த உயர் ரக ஜெர்சி பசுக்கள் தஞ்சாவூர் மாவட்டம் ஈச்சங்கோட்டை கால்நடைப் பண்ணைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின்



ஆலோசனையின் அடிப்படையில் பெறப்பட்ட இந்த ஜெர்சி இன சினைப் பசுக்கள் ஒவ்வொன்றும் பால் தருகின்ற பருவத்தில் மொத்தமாக 5,000 முதல் 6,000 லிட்டர் வரை பால் கொடுக்கும். இந்த இன அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் தமிழகத்தில் பால் உற்பத்தி மேம்படுத்தப்பட்டு, தற்போதைய பால் உற்பத்தி அளவான 39.65 இலட்சம் டன்னிலிருந்து மேலும் அதிக அளவிற்கு உயர வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தினை விரைந்து செயல்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

# அரசு ஊழியர் மலைப்பகுதி பணிப்படி உயர்வு

தற்போது தமிழ்நாட்டில் மலைப் பகுதிகளில் பணிபுரியும் அரசு ஊழியர்களுக்கு, மலைப் பகுதிப் பணிப்படி Hill Allowance அடிப்படை ஊதியத்தில் 20 சதவிகிதம் மாதந்தோறும் 200 ரூபாய்க்கு மிகாமல் வழங்கப்பட்டு வருகின்றது. பல காலமாக உயர்த்தப்படாமல் உள்ள இந்த படித் தொகையை உயர்த்தித் தர வேண்டும் என்ற கோரிக்கையைப் பல்வேறு அரசு ஊழியர் சங்கங்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் முன் வைத்தார்கள்.

நான்காவது ஊதியக் குழுவால் 1984-ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட இந்த மலைப் பகுதி பணிப்படி, ஐந்தாவது ஊதியக் குழுவாலும் (1989) உயர்த்தப்படாமலும் அப்படியே பின்பற்றப்பட்டு வருகின்றது என்பதைக் கருத்தில் கொண்டும், பல்வேறு அரசு ஊழியர் சங்கங்கள் இது தொடர்பாக தமிழக அரசுக்கு விடுத்திருந்த கோரிக்கையில் உள்ள நியாயத்தைக் கருத்தில் கொண்டும், இந்தக் கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டியது அவசியமானது என்ற கருத்தின் அடிப்படையிலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் Hill Allowance-ஐ தற்போது உள்ள 200 ரூபாயிலிருந்து மாதம் ஒன்றுக்கு 300 ரூபாயாக உயர்த்தி வழங்கி ஆணையிட்டுள்ளார்.

இது 1.9.1995 முதற்கொண்டு அமல் படுத்தப்படும்.

தமிழக அரசால் வழங்கப்படுகின்ற இந்த மலைப் பகுதி பயணப்படி இந்த இனத்தில் மத்திய அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற அதிகபட்சப் படியான 150 ரூபாயை விட இரு மடங்கு; மாநில அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# தென்னக இசைக்கெல்லாம் அடியெடுத்துக் கொடுத்து வழிகாட்டிய தமிழ் மகளின் பெருமை போற்றுவோம்!

–டாக்டர் ஞானாம்பிகை குலேந்திரன்

**எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில், மகளிர் கருத்தரங்கில், 'பெண்ணின் பெருமை' என்னும் தலைப்பில், 'கலை' என்னும் பொருளில் டாக்டர் ஞானாம்பிகை குலேந்திரன் அவர்கள் ஆற்றிய உரை:**

பெண்ணின் பெருமையை புரட்சித்தலைவி அவர்கள் முன்னிலையில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு கிடைத்தமைக்கு நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்; பெருமிதம் அடைகிறேன். ஆய கலைகள் 64 என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இன்று உலகப் புகழேட்டில் நிற்கும் எங்களுடைய ஆடற்கலை, இசைக்கலை ஆகிய இந்த இரண்டு கலைகளுக்கும் எங்கள் பெண்ணினம் சேர்த்துத் தந்த மாட்சிமையுடைய பெருமை பற்றி உங்களிடம் சிறிது பேசலாம் என்று விழைகின்றேன்.

## பலநூறு ஆண்டுகள் தமிழ் மக்கள் பேணிப் பாதுகாத்த கலை

உலகக் கலை அரங்கிலே நம்முடைய இந்தியக் கலைகளுக்கு ஒரு தனிப்பெருமை உண்டு. அதனுடைய தொன்மை, அதனுடைய தொடர்ச்சியான பாரம்பரியப் பெருமை எல்லாவற்றிற்கும் மேலாக அதனுடைய தெய்வீகத் தன்மை, இத்தகையதோர் சிறந்த கலை மரபு, இன்று இந்தியாவினுடைய சிறப்பு மிக்கதோர் அரங்கக் கலையாக உலகப் புகழீட்டி வருகின்றது. இந்த இரண்டு கலைகளையும் இந்திய நாட்டு மக்கள் மட்டுமின்றி இந்தியப் பண்பாட்டுப் பின்னணி அல்லாத வெளி நாட்டு மக்களும் விரும்பிக் கற்று அரங்குகளில் அரங்கேற்றி வருகிறார்கள். இத்தகைய அருமையான ஒரு ஆடல் முறை பரதநாட்டியம் என்ற பெயரோடும், இசை முறை கர்நாடக இசை என்ற பெயரோடும் விளங்கிக் கொண்டிருக்கிறது இன்று. உலகளாவிய நிலையில் புகழீட்டி நிற்கின்ற இந்தக் கலைகள் தமிழக மண்ணிலே உருவாகி பலநூறு ஆண்டுகளாகத் தமிழ் மக்களால் பேணிப் பாதுகாத்து இன்று பக்குவமாக உலகிற்குக் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொல்லுகின்றபோது நான் பெருமை அடைகிறேன்.

## ஆதார மூல இசை தமிழ்ப்பண் இசையே

இன்று தென்னகத்திலே பயிலப்படுகின்ற இசை கர்நாடக இசை என்று சொல்லப்படுகிறது. தென்னகத்து மாநிலங்களிலே உள்ள, பயிலுகின்ற எல்லா மொழிகளிலும் இந்த இசையானது அவ்வப்போது இயல் இசை மேதைகளால் பக்குவமாகப் பொலிவு செய்யப்பட்டிருக்கிறது. தெலுங்கு மொழியிலும், வட மொழியிலும் அருமையான கீர்த்தனைகள் பாடிய தியாகய்யரையும், முத்துசாமி தீட்சிதரையும், சாமா சாஸ்திரிகளையும் நாங்கள் இன்று சங்கீத மும்மூர்த்திகள் என்று போற்றிப் பாராட்டுகின்றோம். அதேபோல தெலுங்கு மொழியில் அருமையான தெய்வீகப் பாடல்களைப் பதங்களாகப் பாடிய க்ஷேத்திரஞ்சனை நாங்கள் பதங்களின் சிற்பி என்று சொல்லுகிறோம். புரந்தர தாசரை நாங்கள் சங்கீத பிதாமகர் எனப் போற்றி வணங்குகிறோம். இந்த நிலையிலே இந்த இயல் இசை மேதைகள் பாடிய பாடல்கள் எல்லாம் தென் மாநிலத்திற்குரிய மொழிகளிலே இருப்பினும், இந்த இசை, தமிழ் மண்ணிலே தமிழ் மக்கள் பண்டு காலத்திலிருந்து பயன்படுத்தி வந்த பண்ணிசை முறைகளே என்பதை இன்றைக்கு நாம் உறுதி செய்துவிட்டோம். இதற்கு ஆதாரமாக விளங்குகின்றது நம்முடைய தேவார இசைகள். இன்று இந்திய இசையிலேயே முதன்மையான மூல இசைகளொடு கிடைக்கும் பாடல்கள்

தேவாரப் பாடல்கள், அப்பரும், சுந்தரும், ஆளுடைய பிள்ளை யாரும் பாடிய அதே தேவாரப் பாடல்கள் தான். அந்தப் பண்ணிசையின் பெயரை மாற்றி இன்று கர்நாடக ராகங்களாகப் பொலிவு பெற்று கர்நாடக இசையாக விளங்குகின்றது.

### மறந்து போன தமிழிசையை திரும்பப் பதிவு செய்து தந்த தெய்வத் தமிழ்மகள்

தேவாரப் பண்ணிசை என்று சொல்லி, தெய்வத் தமிழிசை பாடிய 63 நாயன்மார்களை நாங்கள் போற்றுகின்றோமே, இவர்களுடைய இசை வழி வந்தது தான் கர்நாடக இசை என்று சொல்லும்போது, முக்கியமான ஒரு செய்தியை நாங்கள் மறந்து விட்டோம். என்ன அந்தச் செய்தி என்று சொன்னால், இந்தத் தேவார நாயன்மார்கள் தெய்வத் தமிழிசையைப் பாடுவதற்கே முன்னோடியாகவும், முதன்மை யானவராகவும், மூத்தவராகவும் விளங்கியவர் ஒரு அம்மையார். அவர் ஒரு பெண் மகள், தெய்வ மகள், தமிழ் மகள் என்பதையும், இந்தப் பண்ணிசையின் இந்தத் தென்னகத்தினுடைய இசையின் தொடர்ச்சி ஒரு கால கட்டத்தில் மறந்து போன நிலையில், அந்தத் தென்னக இசையைத் திரும்பவும் பதிவு செய்து கொடுத்தவர் அந்தத் தமிழ் மகளே என்பதையும் நாம் மறந்து விட்டோம்.

இந்தப் பண்ணிசைக்கு மூத்தவராக, தெய்வத் தமிழிசை பாடிய தேவார நாயன்மார்களுக்கு மூத்தவராகவும் முன்னோடியாகவும் விளங்கியவர் காரைக்கால் அம்மையார். கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் இல்லறம் நல்லறமாகாத நிலையிலே, இறைவனுடைய திருவடிக்குக் கீழே இருந்து நான் பாட வேண்டும் என்று, அந்த இறையருளைப் பெற்று அற்புதமாக இரண்டு இசைகளைப் பாடினார் அம்மையார். அந்த இரண்டு இசைகளும் தான் இந்தத் தென்னகத்தின் அற்புதமான இசைகளாக இன்று விளங்குகின்றன.

### பழந்தமிழ்ப் பண்களின் பெயர் மட்டும் மாறிவிட்டது

நட்டுவாடிப் பண் என்பதை, கர்நாடக இசையில் பெயர் மாற்றி கம்பீர நாட்டை என்று சொல்லுகிறோம். இறையம்மையின் பாலுண்ட அந்த மூன்று வயது பாலகன் தன்னுடைய திருவாய் மலர்ந்து 'தோடுடைய செவியன்' என்று பாடியது அந்த நட்டுவாடிப் பண்தான். அம்மையார் எடுத்துக் கொடுத்த அந்தப் பண்ணைத்தான் அந்தக் குழந்தை பாடியது. அந்தப் பண்தான் காலப்போக்கில் பெயர் மாறி இன்றைக்கு கம்பீர நாட்டை என்று ஆகியுள்ளது. உங்களுக்குத் தெரியும், நீங்கள் எந்த இசைக் கச்சேரிக்குப் போனாலும், நாட்டியக் கச்சேரிக்குப் போனாலும், காலட்சேபத்திற்குப் போனாலும், கம்பீர நாட்டையில் ஒரு உருப்படி ஆரம்பித்து விட்டால் அந்த நிகழ்ச்சி நிறையும்.

**நம்பிக்கை என்பது ஒரு பறவை; புலருகின்ற பொழுது இருட்டாக இருக்கிறபோதே தனது விடியல் இன்னிசையை அது இசைக்கத் தொடங்கி விடுகிறது.**

**—ரவீந்திரநாத் தாகூர்**

கோயிலில் பாருங்கள்: ஸ்வாமி புறப்படுகிறது. நாதஸ்வரத்தில் மல்லாரி வாசிக்கிறார்கள். அது எந்த இசை? அம்மையார் கொடுத்த அதே நட்டுவாடிப் பண்!

### இசைக்கு ஒரு கம்பீரத்தை இயற்றித் தந்த அம்மை

தத்ததிதாம் தகஜதிதாம் என்று சுவாமி புறப்படுகிறது. அந்த இசையைக் கேட்கிற பொழுது, நமது உள்ளத்திலே ஒரு மங்களகரமான உணர்ச்சி, மகிழ்ச்சியான உணர்ச்சி, ஒரு கம்பீரமான உணர்ச்சி, தோன்றுகிறது. இந்த தென்னக இசையில், இந்த கம்பீர நாட்டையை, இவ்வளவு கம்பீரமான ஒரு இடத்தைப் பெற வைத்தவர் யார்? ஒரு பெண் மகள். நாம் போற்றி வணங்கும் காரைக்கால் அம்மையார்; அவர் தான் இந்த இசையை எடுத்துக் கொடுத்தார். அதேபோலப் பாருங்கள் 'இந்தளப்பண்' என்று அம்மையார் எடுத்துக் கொடுத்தார் ஒரு அருமையான இசை! சுந்தரர் இறைவனைப் பார்த்து, பித்தா என்று வாயைத் திறந்து முதன் முதல் திட்டினாரே, எந்த இசையில்? அம்மையார் எடுத்துக் கொடுத்த அந்த இந்தளப் பண்ணில்தான். அந்த இந்தளப் பண் காலப்போக்கில் என்ன ஆனது தெரியுமா? மாயாமாளவ கௌள என்று பெயர் கொண்டு

# வீரன் அழகுமுத்துக்கோன் பெயரில் புதிய போக்குவரத்துக் கழகம்

**19-ஆம் நூற்றாண்டில், ஆங்கிலேயர்களின் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடியவரும், அந்தப் போராட்டத்தின் காரணமாக வீர மரணம் அடைந்தவருமான "வீரன் அழகுமுத்துக்கோன்" அவர்களின் தியாகத்தையும், ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடிய நல்லுணர்வையும் போற்றும் வண்ணம், வீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் நினைவாக, அவரது திருவுருவச் சிலை ஒன்று அமைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ளார். வீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் திருவுருவச் சிலை சென்னையில் ஒரு முக்கியப் பகுதியில் அமைக்கப்படும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்.**

**மதுரை முத்துக் கிருஷ்ணப்ப நாயக்கரின் திசைக் காவல் தளபதிகளில் ஒருவராக நெல்லைச் சீமையில், கரிசல் காட்டுப் பகுதியில் உள்ள காட்டாளங்குளத்தில் கோட்டைக் காட்டி வாழ்ந்தவர் வீரன் அழகுமுத்துக்கோன் அவர்கள். 19-ஆம் நூற்றாண்டில் கிழக்கிந்திய கம்பெனியின் சார்பில் எட்டையபுரம் மன்னரைக் கப்பம் கட்டச் சொல்லி வற்புறுத்தப்பட்டபோது, ஆங்கிலேயர்களின் ஆட்சியை எதிர்த்த காரணத்தினால், நடுக்காட்டூர் சீமையில் அவரோடு துணையாக இருந்த 6 துணைத் தளபதிகளோடு, ஆங்கிலேயர்களால் பீரங்கியில் கட்டி வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.**

**வீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் புகழுக்கு அணி சேர்க்க புதுக்கோட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு, தமிழக அரசின் சார்பில் புதிய போக்குவரத்துக் கழகம் ஒன்று, "வீரன் அழகுமுத்துக்கோன் போக்குவரத்துக் கழகம்" என்ற பெயரில் விரைவில் அமைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ளார். இதன் பூர்வாங்கப் பணிகளை விரைவில் மேற்கொள்ளவும் ஆணை பிறப்பித்துள்ளார்கள்.**

---

விட்டது. இன்றைக்குச் சங்கீதப் பிதாமகர் என்று சொல்லக் கூடிய புரந்தரதாசர் அவர்கள், சங்கீதம் பயிலுவோர்களுக்கு எல்லாம் ஆரம்பப் பயிற்சிப் பாடங்களைக் கற்றுக் கொடுப்பதற்குத் தேர்ந்து எடுத்த அந்தப் பண், அந்த இசை, அம்மையார் எடுத்துக் கொடுத்த இந்தளப் பண்தான். தென்னக இசையில் உள்ள அத்தனை இயல் இசை மேதைகளும் இந்த மாயா மாளவ கௌள ராகத்தில் இசை உருப்படிகளைப் பாடாதவரே இல்லை என்று சொல்லலாம்.

இசை பயிலுவோரில் இந்த மாயா மாளவ கௌள ராகம் தெரியாதவர்களே இல்லை என்று சொல்லுகின்ற அளவுக்கு ஒரு இசை முறையை எடுத்துக் கொடுத்தவர் அம்மையார். அந்த வகையிலே அம்மையார் எடுத்துக் கொடுத்த இந்த இசை வகைதான் பிறகு பண்ணிசை ஆகி, பண்ணிசை தான் இன்று கர்நாடக இசையாகி, அந்தக் கர்நாடக இசைதான் இன்று நாட்டியத்திற்கு அடித்தளம் ஆகவும், அடிமனையாகவும், அஸ்திவாரமாகவும் அமைந்திருக்கிறது.

**கலை பண்பாட்டுக்கு வரும் தடை எதிர்ப்புகளை வெற்றி கொள்வோம்**

பழைய காலத்திலே மாதவி நல்லாள், பண் என்ற கூத்து பதினொன்றை ஆடினாள் என்று சொல்லுகின்றோம். அந்தப் பண் என்ற கூத்து பதினொன்று ஆடுவதற்கு ஒரு அற்புதமான கலையை உருவாக்கியவர்கள் நமது பெண் மக்கள் தான்.

விரல் வல்லபம் காட்டி

ஆடும் விரலியர் என்று சங்கக் கவிஞர்கள் பாடுகின்றனர். அந்த விரல் வல்லபம் காட்டி ஆடுகின்ற ஒரு ஆடல் முறை, இந்த உலகின் எந்த ஒரு நாட்டிலும் இல்லாத ஒரு அற்புதமான ஒரு கலை முறை. அதனைத்தான் இன்று நாங்கள் அஷ்ட அபிநயம் என்று சொல்லுகின்றோம், வட மொழி யிலே. இதைத்தான் அன்று பிண்டிர் பிணையல் என்றும் ஒற்றைக் கை முத்திரை, இரட் டைக் கை முத்திரை என்றும் மாதவி நல்லாள் ஆடிக் கொடுத்தாள். இந்தப் பண்ணும் கூத்தும் இணைந்த இந்த உயர்ந்த ஒரு நிலையிலே நமது ஆடல் கலை இருந்தது என்பதற்கு அத்தாட்சியாக விளங்குகிறாள் மாதவியாள் என்னும் அந்த ஆடல் நங்கை. அவள் ஆடிய அந்த உயர்ந்த ஆடல் நிலையைப் பின்னர் 400 தேவரடியாட்களை வைத்து இந்தத் தமிழகம் எங்கும் பரப்பிய பெருமை, இந்தத் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய ராஜராஜனுடைய புகழைச் சேர்த்து நிற்கின்றது. 400 கோவில் மகளிரை வைத்துப் பெண்கள் வழியாலேதான், பெண்கள் தான் இந்தக் கலைக்கு உரியவர்கள், இவர்கள் வழியா கத்தான் நாம் இந்த இசையை நாட்டியத்தில் பரப்ப வேண்டும், என்ற உயர் குறிக்கோளுடன் ஒரு தலைமுறையே உருவாக்கியவர் தான் ராஜராஜ சோழன். அந்த நிலையிலே இன்று உலகளாவிய நிலையில் இந்த ஆடலும் இசையும் பரவி இருக்கிற இந்தக் கால கட்டத்திலே நம்முடைய பெண் மக்களுக்கு ஒரு பெரிய ஒரு சவால் ஒன்று எதிர் நோக்கி நிற்கிறது. என்ன சவால் என்று சொன்னால், இன்று தொழில் நுட்பம், விஞ்ஞான முன்னேற் றங்களினால் நம்முடைய கலை களிலும் பண்பாட்டிலும் பல தாக்கங்கள் எதிர்ப்புகள் வந்து கொண்டிருக்கின்றன.

**கலை மரபை காத்து நிற்கும் வல்லமையும் தகுதியும் பெண்களுக்கே உண்டு**

இதனால் நம்முடைய மரபுக் கலைகளுக்குப் பெரிய அழிவு ஏற்படுத்துகின்ற ஒரு சூழ்நிலை. இந்த ஒரு நிலையிலே இதைக் கட்டிக் காக்கின்ற ஒரு பெருமை யும் பொறுப்பும் கடமையும் நம்முடைய பெண் மக்களுக் குத்தான் உரியது என்பதை ஏற்கெனவே சிந்தித்து விட்டார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். எப்படிச் சொன்னார் தெரி யுமா? அறம் எது, மறம் எது என்று நீ தெரியாமல் மலைக் கின்ற போது, வன்மை சூழ்ந்த எளிமையான இந்த சூழலிலே, நீ அல்லல்பட்டுக் கொண்டிருக் கிறபோது, அம்மா குழந்தாய், பெண்ணே, நீ அன்றைய நற்றமிழ்க் கூத்தினை ஆடிக் காட்டு, எங்களுக்குத் துன்பம் வருகின்றபோது பெண்ணே- ஒரு ஆணைக் கேட்கவில்லை அவர். பெண்ணே என்று ஒரு பெண்ணிடம்தான் சொல்லு கிறார் பெண்ணே, எங்களுக்குத் துன்பம் வருகின்றபோது அந்த யாழை எடுத்து மீட்டிக் காட்டு என்று கேட்டார். எவ்வளவு அருமையாக அவர் ஏற்கெனவே சிந்தித்து விட்டார். கலையின் மரபு ஒன்று தொடர்ந்து வர வேண்டுமானால் அது பெண் ணினத்தினால்தான் முடியும்

> **கனவுகளை நனவாக்க ஒரே வழி, உடனே விழித் தெழுவதே.**
>
> **—ஜேயெம்பீ**

என்பதை அன்றே சிந்தித்துச் சொல்லி விட்டார் பாரதிதாசன் அவர்கள். எவ்வளவு அருமை யாகச் சொல்லுகிறார் பாருங்கள்

வன்பும் எளிமையும் சூழும்
நாட்டிலே
வாழ்வில் உணர்வு சேர்க்க - என்
வாழ்வில் உணர்வு சேர்க்க நீ
அன்றை நற்றமிழ் கூத்தின்
முறையினால்
ஆடிக்காட்ட மாட்டாயா கண்ணே


'கண்ணே' என்பது பெண்ணைத் தான்.

துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ
இன்பம் சேர்க்க மாட்டாயா எமக்கு
இன்பம் சேர்க்க மாட்டாயா
கண்ணே, கண்ணே.

இந்த அருமை பெருமை களைக் காக்கக் கூடிய தகுதி, தகைமை யாரிடம் உண்டு, பெண்களிடம் தான் உண்டு. ஒரு நாட்டினுடைய ஒரு இனத் தினுடைய, ஒரு வீட்டினுடைய பண்பையோ, கலாசாரத்தையோ தகைமையையோ கட்டிக் காக் கிற பெருமை பெண்ணினத் திற்குத்தான் உண்டு. ஆதலால் தான் நான் எங்களுடைய அன்புமிக்க புரட்சித்தலைவி அவர்களிடத்தில் ஒரு சின்ன வேண்டுகோள். நம்முடைய தெலுங்கு மொழியிலும் வட மொழியிலும் இந்த இசை முறையை வளமை செய்த சங்கீத மும்மூர்த்திகள் என்று நாம் பாராட்டுகின்றோம். பதங் களைத் தெலுங்கு மொழியில்

பாடிய சேக்ஷத்திரஞ்சனை பதங்களின் சிற்பி என்று சொல்லுகின்றோம். இந்தக் கன்னட மொழியிலே நம்முடைய பயிற்சிப் பாடங்களை எல்லாம் அமைத்துக் கொடுத்த புரந்தர தாசரை சங்கீதப் பிதாமகர் என்று சொல்லுகின்றோம். தென்னகத்து மொழிகளில் எல்லாம் நாட்டிய இசை உருப்படிகளை இயக்கிக் கொடுத்த நாட்டிய சகோதரர்கள் நால்வரையும் சங்கீதப் பரத சிரேஷ்டர்கள் என்று பாராட்டுகிறோம். இந்த நிலையிலே, இவர்கள் எல்லாருக்கும் அடி எடுத்துக் கொடுத்தவர்; சொல்லப் போனால், அம்மையார் கொடுத்த இந்தளப் பண்ணிலே 'பித்தா பிறைசூடி' என்று சுந்தரர் பாடினார்; அம்மையார் பாடிய இந்தளப் பண்ணில் தான் முதன் முதலாக முத்துசாமி தீட்சிதர் 'ஸ்ரீ நாதாபிகுவருவன' பாடினார்; இதே அம்மையார் பாடிய இந்தளப் பண்ணில் தான் முதன் முதலாக நாட்டிய சகோதரர் நால்வரும் தம்முடைய குருவான முத்துசாமி தீட்சிதருக்கு 'மாயா தீர்க்க சொரூபிணி' என்று மாயா மாளவ கௌளத்தில் பாடினார்கள்.

**நீங்கள் கடந்து வந்த வெற்றிப் பாதையைக் காட்டுகிற வரைபடம் இதோ:**




**இதே வரைபடத்தை பக்கம் 15 இல் கூட பார்த்திருக்கலாமே. எண்கள் குறிக்கப்படாமல் உங்கள் சிந்தனைக்கு வேலை வைத்த அதே வரைபடம்தான் இப்போது எண் வரிசை இணைக்கப்பட்டு மேலே கொடுக்கப்பட்டுள்ளது!**

மற்றவர்களையெல்லாம் பரத சிரேஷ்டர் என்றும் சங்கீத சிரேஷ்டர் என்றும், சங்கீத மும்மூர்த்திகள் என்றும், பிதாமகர் என்றும் சொல்லுகின்ற பொழுது ஏன் இப்படி ஒரு நீண்ட ஒரு பாரம்பரியத் தலைமுறையை உருவாக்கிய நம் அம்மையாரை, நம்முடைய தமிழ் மகளை, இவர்கள் எல்லோருக்கும் வழிகாட்டிய மூத்த அம்மையாரைத் தென்னக இசையின் தாய் என்று ஏன் சொல்லிப் பாராட்டக் கூடாது? தமிழர்களாகிய நாம், தமிழ்ப் பெண்களாகிய நாம், இதை செய்தாக வேண்டும். இது யாருக்கும் தெரியாத ஒரு உண்மை, ஒரு நீண்ட பாரம்பரியப் பெருமையை உருவாக்கிய ஒரு அம்மையார், அந்தப் பெருமையை உலகறிய நாம் பறைசாற்ற வேண்டும். அந்த அம்மையாருடைய பெருமையைப் பறை சாற்றுவது மட்டுமல்ல, பரவலாகப் போற்றுவது மட்டுமல்ல, அதை நிலைநிறுத்த வேண்டும். வாயாரப் போற்ற வேண்டும் வாயாரச் சொல்ல வேண்டும். இதற்கு ஆவன முயற்சிகளை எங்களுடைய அன்புக்கினிய, எங்களுடைய நாட்டு மக்களின் தலைவியாகிய புரட்சித்தலைவி அவர்கள் ஆவன செய்து எங்களுடைய பெண்ணின் பெருமையைப் பெருமிதப்படச் செய்வார்கள். இது நிச்சயம்! ☼

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927




தூய
பட்டு

தூய
சரிகை






ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23



